88 August
விஞ்ஞானப் பிரிவு
வகுப்புக்கள்
பிரிவு II
விரைவில் ஆரம்பம்
விண்ணப்பங்கள்
ஏற்கப்படுகின்றன.
விபரங்களுக்கு:
New Master
Institute
B.M.C. Lane, JAFFNA.

# சஞ்சீவி

அறிவு - ஆக்கம் - அபிவிருத்தி

விலை ரூ. 2/-

Physics: திரு. வரிணம்
Chemistry: திரு. தில்லைநாதன்
Botany: திரு. குகாதரன்
Zoology: திரு. நாகநாதன்
Pure & Applied Maths: திரு. நல்லையா
விபரங்களுக்கு:
New Master Institute
B.M.C. Lane, JAFFNA.

மலை:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு மாசி மீ 10 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜமா. ஆகிர் பிறை 12 (22-02-1986) -SANJEAVY- REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்:5

# தமிழ் மொழி மாநிலத்துக்கு இந்தியா முழு ஆதரவு

## இலங்கை அரசு இறங்கி வரவேண்டும் என கருத்து

புதுடில்லி. பெப் 21

**இனப்பிரச்சினைக்குத் தீர்வாக வடக்கு, கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய தமிழ்மொழி மாநில யோசனைக்கு இந்திய அரசு வட்டாரங்கள் முற்று முழுதாக ஆதரவு அளித்துள்ளன என்று மிக நம்பிக்கையாக அறியவருகிறது.**

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்றுயோசனை தமிழ்மொழி மாநில அமைப்புக்கு முக்கியத்துவம் அளித்துள்ளது.

கூட்டணியின் மாற்று யோசனைகளுக்குக் குறைந்த வேறு எந்த யோசனைகளையும் தமிழ் அமைப்புக்கள் சமர்ப்பிக்க முடியாது என்ற வாதத்தையும் இந்திய அரசு வட்டாரங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

தமிழ் ஈழம் கோரிக்கையை முன்வைத்த தமிழர் விடுதலைக் கூட்டணி, ஐக்கிய இலங்கை என்ற அமைப்புக்குள் தமிழ்மொழி மாநிலம் என்ற அளவுக்கு இறங்கி வந்தது குறித்து இந்திய அரசு வட்டாரங்கள் திருப்தி தெரிவித்துள்ளனவாம்.

இனி இலங்கை அரசு தான் தனது நிலையில் இருந்து இறங்கி வரவேண்டும் என்பதில் இந்திய வட்டாரங்கள் உறுதியாக நிற்பதாக அறியவருகிறது.

இந்திய வெளியுறவுச் செயலாளர் ரொமேஷ் பண்டாரி, கடைசியாக சென்னை வந்தபோது தமிழ் விடுதலை அமைப்புக்களுடன் பேச்சுக்கள் நடத்தினர் அல்லவா!

அச்சமயத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்று யோசனைகள் குறித்து திரு. பண்டாரி திருப்தி தெரிவித்தார் என்று அறியவருகியது.

## கருத்துக் கலசம்

மயூரா

தெய்வலோகத்தில் ஒரு காமதேனு. வற்றாத பால் வளம் கொண்ட பசு அது.

வற்றாது பாய்ந்தோடும் கங்கை. முப்புரம் எரித்த சிவனார் முடியில் இருந்து பாயும் பெற்றி உடைய நதி அது.

பசித்தோர்க்கு எந்நேரமும் அமுது படைக்க வல்ல அமுத சுரபி.

இந்த வரிசையில் — குன்றா வளம் கொண்ட அற்புதப் பெட்டகங்கள் பல இருந்ததாக புராணங்கள், இதிகாசங்கள் கூறும்.

அப்படியும் இருக்குமா? வெறும் கற்பனை தானா என்று ஐயுறவும் தோன்றும்.

வளங்கள் எதுவும் இல்லாதது வட பகுதி என்று பலர் நினைக்கிறார்கள். விஷமிகள் சிலர் நினைக்கச் செய்து விட்டார்கள். ஆனால் இலங்கையின் வடக்கிலும், கிழக்கிலும் வரையற்ற வளங்கள் உள்ளன. அவற்றைக் கண்டறிந்து, பயன் பெறும் முயற்சி தான் எம்மிடம் இல்லையே! அறிவும், நிதியும் இருந்து பலன் தான் என்னே!

இதனை விளங்க வைக்கிறார்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞானத் துறை மாணவர்கள். சென் ஜான்ஸ் கல்லூரியில் இன்று அவர்கள் ஆரம்பிக்கும் அபிவிருத்திக் கண்காட்சி தமிழ் மக்கள் எல்லோரது கண்களையும் திறக்க வேண்டும்.

தாய்த் தமிழ் நிலத்தின் இயற்கைச் செழிப்பையும், எதிர்காலப் பொருளியல் வளர்ச்சியையும் கருத்தில்கொண்டு இந்த அபிவிருத்திக் கண்காட்சியை நடத்த முன்னுழைக்கும் இளைஞர்களைப் பாராட்டலாம்.

தமிழ் நிலத்தின் பிரதான வளங்களில் முதன்மையானது பனை. அது எமக்குக் கிடைத்த கற்பகதரு என்று எம் முன்னோர் வர்ணித்தார்கள். அத்தனையும் உண்மை! பிசகாத உண்மை!!

வரண்ட - வானம் பார்த்த பூமி யாழ்ப்பாணம். அந்தக் குறையை ஈடுசெய்ய இயற்கை தந்த வளம் தான் பனை.

வரண்ட பூமியில் செழிப்புக் குன்றாமல் வளரும் சக்தி அதன் தனிச் சிறப்பு. அதனை நாம் இன்னமும் சரிவரப் பயன்படுத்தவில்லை.

தேயிலையை வைத்து, றப்பரை வைத்து, தென்னையை வைத்து பொருள்வளம் தேட நினைத்தவர்கள் பனையை மறந்துவிட்டார்கள்.

நாமே மறந்தால் அவர்கள் எம்மாட்டு? பனை கற்பகதரு. அதனைப் பேணி வளர்த்து எமது சுதேசிய பொருளாதாரத்தை மேம்படுத்தலாம் என்பதை எம்மில் எத்தனை பேர் உணர்கிறோம்.

வீடு கட்டிக் கூரை போட கண்டபடி பனை மரங்களை வெட்டுகி

(8 ம் பக்கம் பார்க்க)

## நேரடி மோதல் பலாலி முகாம் அருகில்

காங்கேசன்துறை, பெப் 22

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு இராணுவத்தினர் வெளியே வந்த போது இளைஞர் கோஷ்டியுடன் நேரடியாக மோத வேண்டிய நிலை ஏற்பட்டது.

முகாமில் இருந்து நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் நடைபவனியாக நேற்று முன்தினம் இரவு 7 30 மணியளவில் மயிலிட்டி வீதிக்கு வந்தனர்.

முகாமில் இருந்து இருநூறு யாருக்குள் ஆயுதப் படையினரை இளைஞர்கள் எதிர்கொண்டனர்.

இளைஞர்களின் தாக்குதலையடுத்து அவர்கள் முகாமுக்கு பின் வாங்கினார்கள்.

அப்பகுதியில் ஒரே குண்டுச் சத்தங்களும், துப்பாக்கி வெடிச் சத்தங்களும் கேட்டன. அப்போது ஷெல் தாக்குதலும் இடம் பெற்றது.

பலாலி, மயிலிட்டி பகுதி மக்களிடையே இரவு முழுதும் பதற்றம் நிலவியது.

இச்சம்பவத்தில் பலாலியைச் சேர்ந்த வயோதிபர் ஒருவர் காயமடைந்தார்.

## கொழும்பில் கைதான தமிழர்களில் 53 பேர் தடுத்து வைக்கப்பட்டனர்

கொழும்பு, பெப் 22

கொழும்பு மாநகரில் கடந்த ஞாயிறு தொடக்கம் கைது செய்யப்பட்ட தமிழர்களில் 83 பேர் விடுவிக்கப்பட்டு விட்டனர்.

மேல் **விசாரணைக்காக** 53 பேர் மட்டுமே தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையில், கொழும்பில்முக்கிய சந்திகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையே நடக்கும் கிரிக்கெட் விளையாட்டை குழப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம் என்ற அச்சம் காரணமாகவே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளனவாம்.

மாளிகாவத்தையில் 2 லொறிகள் சோதனை இடப்பட்டன. 6 தமிழர்கள் இச்சம்பவத்தின் போது கைது செய்யப்பட்டனர்.

## முகாமிலிருந்து வந்த சூடு சிறுவனைத் தாக்கியது!

பருத்தித்துறை, பெப். 22

தொண்டமானாறில் இராணுவ முகாம் பகுதியிலிருந்து வந்த துப்பாக்கிச் சூட்டினால் பத்து வயதுச் சிறுவன் ஒருவன் காயமடைந்தான்.

தொண்டமானாறைச் சேர்ந்த சின்னத்தம்பி சிவா (வயது 10) என்ற சிறுவனே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவராவார்.

தொண்டமானாறிலுள்ள ஆற்றங்கரையில் மீன் பிடிக்கத் தூண்டில் போட்டு விட்டு நின்ற சிறுவன் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

சிறுவனின் முதுகிலும், கையிலும் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

அவர் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## 'ருகிங்' குறித்து முறைப்பாடு செய்தால் தகுந்த நடவடிக்கை

### உபவேந்தர் அறிக்கை

யாழ்ப்பாணம், பெப். 22

பல்கலைக்கழகத்தில் 'ருகிங்' கிற்கு (துன்புறுத்தலுக்கு) உள்ளாகுவோர், அது குறித்துத் தனிப்பட்ட முறையில் சிரேஷ்ட மாணவ ஆலோசகரிடமோ, பீடாதிபதிகளிடமோ அல்லது துணைவேந்தரிடமோ முறையீடு செய்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இப்படி உறுதியளித்திருக்கிறார் யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன்.

''ருகிங்'' தொடர்பாக அவர் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

நிர்வாகத்திற்கு இதுவரை கிடைத்த முறையீடுகளில் ஒன்று, மாணவி ஒருவரை மாணவர் ஒருவர் துன்புறுத்தினார் என்பதாகும்.

இது தொடர்பாக அந்த மாணவி, மாணவனுக்கு எதிராக எதுவித மான பாரதூரமான குற்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் நகரில் நேற்றும் ஹர்த்தால்

நல்லூர், பெப். 22

நேற்றும் யாழ்ப்பாணத்தில் கடைகள் மூடப்பட்டிருந்தன.

வாகனங்கள் மிகக் குறைவாக சேவையில் ஈடுபட்டன.

அரச அலுவலகங்கள் பாடசாலைகள் போன்றவற்றுக்கு ஊழியர்கள், மாணவர்கள் வெகு குறைவாகவே வருகை தந்திருந்தனர்.

யாழ் வைத்தியசாலை வெளிநோயாளர் பகுதியில் நோயாளர்கள் மிகக் குறைவாகவே காணப்பட்டனர்.

நேற்றும் வாகனங்களில் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

அஞ்சலி செலுத்தும் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் மரணமான ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்க உறுப்பினர் சோ. ஜெகநாதனின் (அமீன்) மறைவுக்கு அஞ்சலி செலுத்தவே நேற்று யாழ்நகரில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

## கருகத் திருவுளமோ?



தண்ணீர்விட் டோவளர்த்தோம்? சர்வேசா! இப்பயிரைக்
கண்ணீராற் காத்தோம்; கருகத் திருவுளமோ?
எண்ணமெலாம் நெய்யாக எம்முயிரி னுள் வளர்ந்த
வண்ண விளக்கிஃது மடியத் திருவுளமோ?
ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர்
வாராது போலவந்த மாமணியைத் தோற்போமோ?

— இப்படி சுதந்திரப் பயிரைப் பாடினார் மகாகவி பாரதியார்.

மயூரதன் என்ற சுதந்திரப் பயிருக்கும் இது சாலவும் பொருந்தும்.

தாவடிப் பகுதியில் கடந்த புதன்கிழமை நடந்த விமானத் தாக்குதலில் மறைந்த சின்னஞ் சிறிய சுதந்திரப் பயிர் மயூரதன்.

மயூரா என்று அன்புடன் அழைக்கப்பட்டு வந்தான் அவன்.

நூறாண்டு காலம் வாழ்க! நோய், நொடி இல்லாமல் வாழ்க!

இப்படி அயலவர் அனைவராலும் வாழ்த்தப்பட்ட மயூரா, கண நேரத்தில் மறைந்து விட்டான்.

தந்தை வழியிலே மயூராதான் ஆண் வாரிசு.

''நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும்—'' என்று வளர்க்கப்பட்டு வந்த மயூரா இன்று மௌனியாகி விட்டான்.

தாவடி சுந்தரலிங்கம்-பத்மாவதி தம்பதிகளின் ஒரே புதல்வன் மயூரதன்.

தாய் பத்மாவதியுடனும் தங்கை மயூரதியுடனும் துள்ளிக்குதித்த நிலையில் மயூரதன் படத்தில் (இடது புறம்) காணப்படுகின்றான்.

[தாவடிப் பயங்கரம் பற்றிய விவரணக் கட்டுரை 2-ஆம் பக்கத்தில்.]

## மனைவியுடன் கணவர் உடன்கட்டை!

கொழும்பு, பெப். 22

மனைவியின் பிரிவு தாங்காது கணவன் உடன்கட்டை ஏறினார்.

இந்த நிகழ்ச்சி மதவாச்சியில் நேற்று இடம் பெற்றது.

இளம் குடும்பப் பெண் பிரேமா சரனேவா இருதய நோய் காரணமாக இறந்து விட்டார். பௌத்த சமய சம்பிரதாயப்படி, அப்பெண்ணின் உடல் தகனம் செய்யப்பட்டது.

அந்த நேரத்தில் துக்கம் தாளாது அரற்றிக் கொண்டிருந்த கணவர். ஏ. ஈ. எஸ். பந்துசேன எரிந்து கொண்டு இருந்த சிதையில் குதித்தார்.

அருகில் நின்றோர் அவரை இழுத்துக் காப்பாற்ற முயற்சித்தனர். தீச்சுவாலை அவரை முழுவதாக விழுங்கவே குழுமி நின்றவர்களால் அவரைக் காப்பாற்ற முடியாது போயிற்று.

உயிருடன் உடன்கட்டை ஏறிய சம்பவத்தை அனைவரும் பதறியபடி பார்த்துக் கொண்டு நின்றனர்.

உடன் கட்டை ஏறிய பந்துசேன மதவாச்சி நகரில் பிரபல வர்த்தகர். அவருக்கு இரண்டு பிள்ளைகள்.

## வீட்டுவளவில் நின்றவர் சுடப்பட்டு மரணம்

காங்கேசன்துறை, பெப். 22

ஒருவரின் வீட்டு வளவுக்குள் திடீரென புகுந்த இராணுவம் அங்கிருந்த வீட்டுக்காரரைச் சுட்டுக் கொன்றது.

காங்கேசன்துறையை அடுத்துள்ள ஊறணியில் நேற்று நண்பகல் 11.30 மணியளவில் இச்சம்பவம் நடந்தது.

காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து பலாலி முகாமுக்கு பொருள்களை எடுத்துச் செல்வதற்காகப் பெருந்தொகையான இராணுவத்தினர் துறைமுகத்தை நோக்கி லொறிகள் சகிதம் வந்துகொண்டிருந்தபோது இச்சம்பவம் நடந்தது.

வீதியாலும், வீட்டு வளவுகளுக்கு ஊடாகவும் வந்த இராணுவத்தினர் தமது வீட்டில் நின்ற முத்தன் (45 வயது) என்பவரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்படுகிறது.

அவரது முகத்தில் காயமேற்பட்டது. அந்த இடத்திலேயே அவர் பலியானார்.

ஊறணி புனித அந்தோனியார் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள அவரது வீட்டிலிருந்தசமயம்இதுநடந்தது.

## அக்கரைப்பற்றில் தமிழ் விவசாயிகள் 106 பேர் பலி

### சடலங்கள் வயலில் எரிப்பு?

மட்டக்களப்பு, பெப் 22

அக்கரைப்பற்று, தங்கவேலாயுதபுரம் குடியேற்றப் பகுதியில் ஆயுதப் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானோர் எண்ணிக்கை நூற்றுஆறு என அறியப்படுகிறது.

அவர்களின் சடலங்கள் வைக்கோலுக்குள் போட்டு எரிக்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டது.

தங்கவேலாயுதபுரத்தில் இறந்தவர்கள் தமிழ் விவசாயிகள் ஆவர். அவர்களின் சடலங்கள் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்படவில்லை.

வயலில் காணப்பட்ட வைக்கோலுக்குள் சடலங்கள் போடப்பட்டு எரிக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

22- 02 - 1986

சனிக்கிழமை

சுபநேரம்:
3-31 முதல் 5-01 வரை
ராகுகாலம்;
9-31 முதல் 11-01 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

சனிப்பிரதோஷ விரதம்

## 4 அடி உயரக் குண்டு மக்கள் பார்வைக்கு

### உரும்பராயில் வைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், பெப். 22

உரும்பராய் பகுதியில் கடந்த புதன்கிழமை விமானத்திலிருந்து வீசப்பட்ட பாரிய குண்டுகளில் ஒன்று வெடிக்காமல் கீழே கிடக்கக் கண்டு பிடிக்கப்பட்டது.

சுமார் 4 அடி உயரமும் ஒன்பது அங்குல குறுக்கு விட்டமுமுள்ள இந்தக் குண்டு உரும்பராய் பகுதியில் பொதுமக்களின் காட்சிக்காக நேற்று வைக்கப்பட்டிருந்தது.

ஆயிரக் கணக்கானோர் இந்தக் குண்டைப் பார்த்தனர்.

'ஜெட்' விமானம் போன்ற தோற்றத்தில் கறுப்புக் கலந்த பச்சை நிறத்தில் காணப்படும் இந்தக் குண்டின் அடிப் பகுதியில் சிறு வால் போன்ற அமைப்பில் மூன்று வெளி நீட்டங்கள் காணப்படுகின்றன.

## சிற்றாறில் இறந்தவர்கள் ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள்

### சென்னையில் ஈரோஸ் அறிக்கை

சென்னை, பெப். 21

ஆயுதப் பயிற்சி பெற்ற சிங்களவர்களை தமிழ்ப் பகுதிகளில் குடியேற்றுவதை அரசு நிறுத்த வேண்டும்.

இல்லையேல் தெஹிவத்தை சிற்றாறில் மேற்கொண்டது போன்ற பெரிய அதிரடித் தாக்குதல்கள் தொடரும்.

ஈரோஸ் இயக்கம் இன்று சென்னையில் விடுத்த அறிக்கையில் இப்படித் தெரிவித்திருக்கிறது. அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

தெஹிவத்தை சிற்றாறு பகுதியில் கடந்த புதனன்று மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலில் 14 இராணுவத்தினரும் 50க்கும் அதிகமான ஆயுதப் பயிற்சி பெற்ற நபர்களும் சம்பவம் நடந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

இவர்களிடமிருந்து வேட்டைத் துப்பாக்கிகளும் இயந்திரத் துப்பாக்கிகளும், கைக்குண்டுகளும் கைப்பற்றப்பட்டன.

சேருவாவிலையிலுள்ள ஊர்காவல் படை பயிற்சி முகாமில் ஆறு வாரகால ஆயுதப்பயிற்சியை பெற

(8 ஆம் பக்கம் பார்க்க)

புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ காலையிலே நோட்டம்; மாலையிலே வேட்டை

# தாவடியில் விமானங்கள் நடத்திய ஊழித் தாண்டவம்

குவிந்தன; குறி பார்த்தன. குண்டு வீசின—

இது 'உதயன்' நாளிதழின் தலைப்புச் செய்தி.

பாலகர்கள் கருகினார்கள்; பாட்டனாரும் மரணத்தைத் தழுவினார்.

பச்சைப் பசேல் ஆகக் காட்சி அளித்த பயிர்கள் கருகின.

'தலையாலே தான் தருதலால்' என்று பெயர் பெற்ற தென்னைகளும் இடையிலே முறிந்து விழுந்தன.

தாவடிப் பகுதியில் கடந்த புதன்கிழமை மாலை வானில் நடந்த 'காவடி' ஆட்டத்தினால் நேர்ந்த அனர்த்தங்கள் இவை. காலையிலே நோட்டம் பார்த்தன; மாலையிலே வேட்டையை நடத்தின.

யாழ் குடா நாட்டிலே நடந்த முதலாவது பெரிய விமானத் தாக்குதல் சம்பவம் இது.

அடுத்த நாட்காலை அந்த இடத்துக்கு விரைந்து சென்று பார்த்தால், அனைவரின் முகங்களிலும் ஈயாடவில்லை. முதல் நாள் மாலையில் நடந்த பயங்கரம் ஒவ்வொரு 'சொல்'லாக முகத்திலே எழுதப்பட்டுக் காட்சியளித்தது.

**இவ்வார முக்கிய சம்பவம்**

### பிரளயமோ என்று நினைத்தோம்

என்ன நடந்தது? குமாரசாமி என்பவர் சொல்கிறார்.

இரண்டு, ஒன்றாக வந்தன. எதிர்ப்பக்கத்தில் இருந்து மூன்று, ஒன்றாக வந்தன. வழமை போன்று வானில் பறந்து கலக்கி அடிக்கும் 'குருவி'யும் கூட வந்தது.

ஒன்றாக வந்த இரண்டுக்கு, ஒன்றாக வந்த மூன்றும் துணையாகப் பறந்தன.

திடீரென்று ஒன்று நிலத்தை நோக்கிக் குத்துக்கரணம் போடுவது போல் வந்தது. அடுத்த நிமிடம் அது ஒரு பக்கம் சரிந்தது.

மறுகணம் நிலமே அதிர்ந்தது.

பிரளயமோ என்று பிஞ்சுகளில் இருந்து முதியவர்கள் வரை மூலை முடுக்குகளை நோக்கி ஓடினர்.

ஒரு மணித்தியாலம் வரை நடந்த இந்த 'ஊழித்தாண்டவம்' என்றும் நினைவை விட்டு அகலாது.

ஓய்வு பெற்ற அரச அதிகாரி கூறுகிறார்:

பயங்கரமா? இந்த அளவில் தப்பியதே பெரிய காரியம்.

இரண்டாம் உலக மகா யுத்தத்திலும் குண்டு வீச்சுக்களைக் கண்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல. உயிர் தப்ப குழிகளுக்குள்ளும் (trench) பதுங்கியுள்ளேன்.

அதை எல்லாம் இது தோற்கடித்து விட்டது.

அப்பப்பா! நினைத்தாலே மயிர்க்கூச்செறிகிறது – இப்படி படபடக்கக் கூறினார்.

வியாழன் காலை 10.33 இருக்கும். வானில் 'கிர்' என்று ஓசை. மீண்டும் வினை வந்து விட்டதோ! ஏதோ என்று எண்ணி அருகில் இருந்த வீடு ஒன்றினுள் நுழைய வேண்டியதாயிற்று.

புத்தம் புதிய வீடு. 'பளிச்' என்ற சுவர்கள். தப்பினோம், பிழைத்தோம் என்று உள்ளே சென்ற பின்னர் தான் தெரிந்தது, மாட்டிக் கொண்டோம் என்று.

யன்னல் கண்ணாடிகள் எல்லாம் நொருங்கி உள்ளே கீழே நிலத்தில் கிடந்தன.

★ தீபன் ராஜா ★

சீலிங்காக போடப்பட்டிருந்த அஸ்பெஸ்டாஸ் ஷீட்டுக்கள் உடைந்து கிடந்தன.

சுவர்களிலே வெடிப்புக்கள். அத்திவாரமே ஆட்டம் கண்டு இருக்க வேண்டும். அந்த நிலையில் வீடு இருந்தது.

புதியவீடு, கட்டிமுடிக்கப்பட்டு ஆறு மாதங்கள் ஆகவில்லை என்று சொன்னார்கள்.

அப்படியா என்று கூறிக்கொண்டு வெளியே வந்து அண்ணாந்து பார்த்தேன்.

வானிலே பறந்த 'கிர்' ஓசையின் உரிமையாளர் போய்விட்டாரா என்று.

### பயிர்கள் பச்சையா? கறுப்பா?

கருகிய மொட்டைத் தென்னை மரங்கள் பலவற்றைக் காணக் கூடியதாக இருந்தது.

அருகிலே மிளகாய்த் தோட்டம் இருக்கின்றது என்று சொன்னார்கள்.

எங்கே என்று கேட்டால், நீங்கள் நிற்கும் இடம்தான் என்று சொல்லப்பட்டது.

சாம்பல் பூத்துக் கிடந்தது பூமி. தடிகள் நட்டாற் போல் காட்சியளித்தன.

இலைகளும் இல்லை. பூக்களும் இல்லை. காய்களும் இல்லை. இப்பயிர்களுக்குப் புதன் கிழமை நீர் பாய்ச்சிக் கொண்டிருந்த இரண்டு 'பிஞ்சுகளும்' இல்லை.

## பிரளயத்தின் முதலாவது கட்டமோ என மக்கள் சந்தேகம்

அருகிலே ஒரு கிடங்கு தான் காணப்பட்டது. 3 அடி அகலம் 1 அடி ஆழம் உள்ள கிடங்கு அது.

இக் கிடங்குக்கு மிக அருகில் தான் அந்த இரண்டு 'பிஞ்சுகளும்' இருந்தனவா? இல்லை.

### பிஞ்சுகளும் கிடங்கும்

பிஞ்சுகளுக்கு அருகில் தான் 'கிடங்கு வந்து விட்டது.

'கிடங்கு'க்கு அருகில் 'பிஞ்சுகள்' வரவில்லை.

இப்படி ஒரு விளக்கம். 'கிடங்கு' உருவான சமயமே 'பிஞ்சுகள்' பறிக்கப்பட்டு விட்டன அருகிலே தூக்கி எறியப்பட்டன. ஒரு 'பிஞ்சு' அணிந்து இருந்த காற்சட்டை, ஒரு மூலையில் அடுத்த நாளும் கிடந்தது.

இன்னொரு இடத்தில்............ முழக்கங்களின் மத்தியில் பாட்டனாருக்கு பேரன், பேர்த்திகள் நிலை என்னவோ என்ற ஏக்கம் ஏற்பட்டு விட்டது.

80 வயது என்றாலும் நினைத்ததை முடிக்கும் வல்லமை அவருக்கு. வீட்டை விட்டு வெளியே வந்து வீதியில் நடக்கத் தொடங்கினார். விதி வானில் இருந்து வந்து விளையாடியது.

பாட்டனாரும் பறிக்கப்பட்டார்.

இப்படி நடந்து கொண்டே போன சமயம் தோட்டத்தின் நடுவே ஒரு குட்டிச்சுவர். அதனைத் தொட்டார் ஒருவர். அவ்வளவுதான் 'தொப்' என்று சத்தம் கேட்டது.



மீண்டும் வந்து விட்டதோ வினை என்று எண்ணும் முன்னர், குட்டிச் சுவர் விழுந்து விட்டது என்று சொல்லப்பட்டது.

'குட்டிச் சுவர்' நிலை தான், இத்தாக்குதல் நடந்த பகுதியில் உள்ள வீடுகள் சிலவற்றுக்கும் ஏற்பட்டுள்ளது என்று கூடப்பட்டது.

வாழைகள் எல்லாம் 'தோரணங்களாக' மாறி இருந்தன. நார் நாராகக் கிழிந்து கிடந்தன. சாம்பல் பூத்தது போன்ற நிலையில்தான் பயிர்பச்சைகள் காட்சி அளித்தன.

தாவடிப் பகுதியில் வன்னிய சிங்கம் வீதியில் உள்ள நிலைமை இது.

உரும்பராய் மேற்கு அம்மன் கோயிலடி வீதியில் உள்ள வளவு ஒன்றினுள் போடப்பட்ட குண்டு வெடிக்காமலே நிலத்தில் புதையுண்டு காட்சியளித்தது.

### தென்னையில் நார் உரிப்பு

தேங்காய் மட்டையில் தான் நார் உரிப்பார்கள்.

தென்னை மரங்களிலும் அங்கு நார் உரிக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

கத்தி பாவித்து கைகளினால் உரிக்கப்படவில்லை. வானில் இருந்து வந்த குண்டுகள்தான் நார் உரித்துள்ளன.

அவை மனிதர்களில் பட்டு இருந்தால்......... நினைக்கவே முடியவில்லை.

இது போன்று இனியும் நடக்கும்; அப்பாவி மக்கள் ஒதுங்கிக் கொள்ளுங்கள் என்று எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுளது.

**தாவடிக் குண்டு வீச்சு**

ஆண்டவா! இது என்ன சோதனை! எல்லாரும் ஏங்குகின்றோம்.

சுதந்திரம் என்பது சுக்கா? மிளகா?

சுக்கு, மிளகு என்றால் விலை கொடுத்து வாங்கலாம்!

சுதந்திரம் அல்லவா! உயிரை விலையாகக் கொடுத்துத்தான் வாங்க வேண்டும்.

இப்படி எண்ணி அமைதி அடைவோரும் உள்ளனர்.

**'சஞ்சீவி'யின் நாளிதழ் 'உதயன்'**

# தத்துவச் சிந்தனைகளில் தலைநின்ற சத்திய ஞானி ஜித்து கிருஷ்ணமூர்த்தி

கந்தையா நவரேந்திரன்

"புற உந்தல்களால் பொத்துண்டலையா மனமே உள்ளூற நோக்கி உண்மை காணும்"

ஜித்து கிருஷ்ணமூர்த்தி 1895ம் ஆண்டு வைகாசி மாதம் 11ம் திகதி தென் இந்தியாவிலுள்ள மதனபள்ளி என்னும் இடத்தில் பிராமண குடும்பமொன்றில் தனது பெற்றோருக்கு எட்டாவது பிள்ளையாகப் பிறந்தார். ஜித்து என்பது இவரது மூதாதையர் வாழ்ந்த கிராமத்தின் பெயராகும். பத்து வயதில் தாயை இழந்த கிருஷ்ணமூர்த்தியை பெஸந்து அம்மையார் தனது பிள்ளையாக வளர்க்கத் தொடங்கினார். கிருஷ்ணமூர்த்தி தம்மத்தியிலிருப்பதென்பது எதிர்பாராவிபத்தாக நிகழ்ந்ததொரு நிகழ்ச்சியாகக் கொள்ளமுடியாதென உணர்ந்த பெஸந்து அம்மையார் கிருஷ்ணமூர்த்தியிலிருந்து ஓர் அசாதாரண ஒளிமிளிர்வதைக் கண்டார். இவர் எதிர்காலத்தில் தேவதூதராய்- மீட்பாளராய்த் திகழ்வாரென எண்ணி அதற்கான ஒழுங்குகளைச் செவ்வனே செய்தார்.

அன்னவரது எதிர்பார்ப்புக்களுக்கும் முரணான முறையில் 1929ம் ஆண்டு தான் தலைவராகவிருந்த 'Order of the Star' என்ற நிறுவனத்தை கிருஷ்ணமூர்த்தி கலைத்தார். அவரது எதிர்காலத் தெய்வீகத் தொண்டுக்கெனப் பெஸந்து அம்மையாரால் சேர்த்து வைக்கப்பட்ட பெருந்தொகைப் பணத்தையும் இவரது நிரந்தர இருப்பிடத்திற்கெனக் கவனமாகத் தெரிவு செய்யப்பட்டு ஒல்லாந்து நாட்டில் பெறப்பட்ட பெரிய அரண்மனையையும் அதைச் சார்ந்த இடத்தையும் உரியவர்களிடமே திருப்பி ஒப்படைத்துவிட்டு எவருமே எதிர்பாராத வகையில் புதிய வழியில் செல்ல முற்பட்டார். அவர் நாடு, மொழி, மதம் ஆகிய புறப்பிரிவுகளுக்கப்பால் செயற்படத் தொடங்கினார். 'வாழ்க்கை' என்னும் அழியாத - ஒப்பற்ற நூலிலிருந்து தம் அறிவைப் பண்பைப் பெருக்கிக் கொண்டு நெருங்கிப்பழகி அவர்களது மனம், எண்ணம், செயல் ஆகியவற்றை அணுகி நின்று அவதானித்தார். மீட்பாளராய் திகழ்வாரென்ற முன்மொழிக்கிணங்க மறுத்ததின் மூலம் தாமவரேயென்பதை உலகிற்குக் காட்டிவிட்டார்.

இவரது செல்வாக்கு இந்திய நாட்டினில் மட்டுமன்றி உலகின் பல்வேறு பாகங்களிலும் பரந்தும் ஆழமாகவும் உன்னிப்பாக உணரப்படுகின்றது. பண்டுதொட்டு நிலவிவரும் மரபுகள், நிலைநாட்டப்பட்ட நிறுவனங்கள், குறிப்பிடத்தக்க பழக்கங்கள், எடுத்துக்காட்டமைப்பான எண்ணங்களென் பலவற்றாற் பொத்துண்டலையா அமைதிகொள் மனத்தாலேயே உண்மையைக் காணவேண்டுமேயன்றி உண்மையைப் பிறரால் இன்னொருவருக்குக் காட்ட முடியாதென்பதை உணர்ந்த கிருஷ்ணமூர்த்தி அத்தேடுதலுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலேயே தமது உரைகளைச் செய்து வந்தார். அவரது நல்லுரைகளைக் கேட்பவர் தங்கள் விருப்புக்கும் மனத்திறனுக்கும் பொருத்தமான வழி நின்று ஆன்மிகவுணர்வு பெறப்புத்துணர்வும் ஊக்கமும் அளிக்கப்பட்டவராகின்றனர்.

ஆன்மிகத் தளையைக் களைந்து ஒவ்வொருவரும் விடுதலை பெற அவர் மேற்கொண்டிருந்த பண்பைக் காலத்தால் வரையறுக்கப்பட்ட நுட்பம் வாய்ந்த சொற்கோவைகளாற் காட்டுதல் மிகவும் கடினமானதாகும். கிருஷ்ணமூர்த்தி புதிதாக எந்தவொரு தத்துவத்தையோ சித்தாந்தத்தையோ கோட்பாட்டையோ வெளியிடவில்லை, போதிக்கவில்லை. என்றும் மங்காத வித்தொளிவிட்டு நிலைபெறுடைதாய்ப் பிரகாசிக்கும் உண்மையுடன் ஒருவர் நேரடித் தொடர்பு கொண்டு நேரடி அனு- வம் பெறவேண்டுமென்பதே அவர் நோக்கமாகும்.

காலத்தின் அசைவிற்குள் அகப்படாத, கூறுபடாத முழுமையான செயற்பாடுளது? அக-புற முரண்பாடுகள், சச்சரவுகள், அச்சங்கள் இல்லாமல் பூரண சுதந்திரத்துடன் எம்மை வாழவைக்கக்கூடிய சரியான செயல்தான் எது? சூழலால் வரையறுக்கப்படாத செயலெதுவாயினும் உண்டா? புறத்தை- சூழலை மாற்றினால் மனிதன் மாறுவான் என்றனர் சிலர், மனிதனோ மாறவில்லை. புறச்சூழலால் ஒன்றுமியலாது, தெய்வீகத்தில் நம்பிக்கை வைத்தால் எல்லாமே சரியாகி மனிதன் நல்வழிப்படுத்தப்படுவான் என்றனர் வேறு சிலர். இரசாயனப்படிமுறையான எண்ணத்தால் எங்களது பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமா?

இதனைப் புரிவதற்கு எண்ணத்தின் வரையறைகளை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும். எண்ணமேதொழில்நுட்ப உலகைத் தோற்றுவித்துள்ளது. எண்ணமே 'நான்' 'நீ' என்ற விம்பங்களைத் தோற்றுவிக்கிறது. இந்த விம்பங்களே பிரிவினைகளையும் பிரச்சினைகளையும் தோற்றுவிக்கின்றன. எண்ணம் எப்பொழுதும் இருமையாகவும் எதிர்மறையாகவுமே செயற்படக்கூடியது. ஆனபடியாற்றான் எண்ணமானது நம்பிக்கைகளையும் கோட்பாடுகளையும், சித்தாந்தமோதர்களையும், மதங்களுக்குள் மலிந்து வரும் மோதல்களையும், அரசியல் பிணக்குகளையும், இனங்களையும், சாதிகளையும், முடிபுகளையும், மனிதர்களுக்குள் வேற்றுமைகளையும் தோற்றுவிக்கிறது. சமூக நடைமுறையின் முழுவடிவத்தையும் தோற்றுவித்ததும் எண்ணமேயாகும்.

எண்ணமானது தன்னைத் தானே தெரிந்து கொள்ளுமா? அப்படி முடியுமானால் அந்த விழிப்பு நிலையும் எண்ணத்தின் ஒரு பகுதியா? தனது அசைவுகளையே எண்ணமானது உற்று நோக்கக்கூடுமா? நான் எனது எண்ணத்தின் அசைவு பற்றி விழிப்பாக இருக்கிறேன் என்னும் போது மீண்டும் 'நான்' 'எனது' என்று எண்ண அசைவுகள் எனது விழிப்பு நிலையில் குறுக்கிடவில்லையா? நாங்கள் ஒழுங்கற்ற உலகில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். இவ்வொழுங்கீனம் எமது அகத்திலும் புறத்திலும் காணப்படுகிறது. எமது அகத்திலுள்ள ஒழுங்கீனத்தின் வெளிப்பாட்டையே [illegible] ஒழுங்கீனம் என்னும் பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு நாங்கள் பலவழிமுறைகளைச் செய்து பார்க்கின்றோம். போதை மருந்துகள், தியானங்கள், கோட்பாடுகள், சித்தானந்தங்கள் போன்ற இன்னோரன்ன முறைகளையெல்லாம் பின்பற்றியும் செய்தும் பார்க்கின்றோம். புறத்திலிருந்து வரும் எவ்வித திணிப்பினாலும் அகத்திலுள்ள ஒழுங்கீனத்தைப் போக்க முடியாமல் குழம்பி நிற்கின்றோம். அகத்திலுள்ள ஒழுங்கீனத்தை வெறுமனே அங்கீகரிப்பதாலும் நிராகரிப்பதாலும் பயனெதுவுங் கிடையாது. இவ்வொழுங்கீனத்தைப் புறவுந்தல் எதுவுமின்றி முழுமையாக உற்று நோக்கி அதனால் ஏற்படும் தெளிவால் முழுமையாக மறுப்பதனாலேயே ஒழுங்கை உருவாக்க முடியும்.

என்றுமில்லாதவாறு பயங்கரமான சூழ்நிலையில் யாமனைவரும் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இன்று உலகில் எங்கு பார்த்தாலும் ஊழல், இலஞ்சம், போட்டி, பொறாமை, பட்டினி, போர், வன்முறை ஆகியன மலிந்து காணப்படுகின்றன. இன்று காணப்படும் கல்விமுறையும் எம்மை அத்தகைய சிக்கல்கள் நிறைந்த சமுதாயத்தில் ஓர் அங்கமாய்ப் பொருத்தி விடத்தக்க முறையிலேயே அமைந்துள்ளது. 'அன்பு' என்பது வெறுமனே ஆன்மிக அல்லது உடல்சார்ந்த பொழுது போக்காகவே மாறிக்கொண்டு போகின்றது. உலகத் தலைவர்களும் போதகர்களும் மேலெழுந்தவாரியான [illegible] களிலும் ஒழுங்கமைப்புக்களிலும் அமைப்புமுறைகளிலுமே நாட்டம் காட்டிவருகின்றனர். இவையாவும் திறமையை வளர்க்கவுதவுமேயன்றி எம்மை நோக்கியுள்ள பிரச்சினைக்குத் தக்க — பூரணமான விடையாக அமையா. சமயங்கள் வெறும் பிரசாரங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. எதிலுமே அக அழகில்லாமற் போயிற்று.

கல்வி பண்பாட்டின் வெளித்தோற்றத்தை மினுக்கி பகட்டாகக்காட்டுவதற்கே உபயோகிக்கப்படுகின்றது. நாம் எமது உன்னத சக்திகள் யாவற்றையும் இவ்வாறு மேலெழுந்தவாரியான அர்த்தமற்ற செயற்பாடுகளில் செலவழிக்கச் செலவழிக்க எம்மை ஆக்கிரமித்திருக்கும் அச்சம் துயரம் ஆகியவற்றைத் தீர்க்கவோ புரிந்துகொள்ளவோ எமக்குத் தேவையான சக்தியை எங்கிருந்து பெறப்போகின்றோம்? சுய அறிதல்மூலம் இப்பிரச்சினையானது தீர்க்கப்படாத பட்சத்தில் புரட்சிகளும் முடிவற்ற பகைமைகளும் மக்கள் மத்தியிற்றோன்றிக் கொண்டேயிருக்கத்தான் செய்யும். சுய அறிதல் என்பதே ஞானத்தின் தொடக்கமாகும். சுய அறிதலுக்குத்தடையாக விருப்பது எண்ணமேயாகும். ஞாபகம், அனுபவம், அறிவு ஆகியவற்றின் எதிர்செயலாகிய எண்ணத்தால் எங்கள் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுமா? ஞாபகம் என்பது உடல்சார்ந்த — பருப்பொருள்சார்ந்த படிமுறையாகும்.

எண்ணமோ பருப்பொருள் — இரசாயனத் தன்மை கொண்டதென்பதை விஞ்ஞானிகளும் ஒப்புக் கொள்கின்றனர். எண்ணமானது உலகத்திலும் எம்முள்ளும் அஃறிணைப் பொருட்களைத் தோன்றுவித்துள்ளது. இவ்வியற் பொருள் உலகிலிருப்பவையெல்லாம் பொருட்களேயாகும்.

சத்தியத்தைப் புரிந்து கொள்வதற்கு இயற்பொருள் நிலையின் வரையறைகளை யாம் புரிந்து கொள்ளுதல் வேண்டும். உலகத்திலும் எங்களது மனங்களினுள்ளும் எண்ணமானது பல சிக்கலான பிரச்சினைகளை உருவாக்கி

(7ஆம் பக்கம் பார்க்க)

எமது புதிய வெளியீடுகள்

* நதியா, பேபி ஷாலினி
நினைவே மலரே (தரமான பிரதி)
* தியாகராஜன் – சுலக்சனா
முரட்டுக்கரங்கள் (Pyramid Master)
* சிரஞ்சீவி – ராதா
பந்தயம் (V. G. P. Master)
* மோகன் – ரேவதி
டிசெம்பர் பூக்கள் (Pyramid Master)
* சந்திரசேகர் – நளினி
வீட்டுக்காரி (Thomsun Master)

துணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 23665

இலங்கைப் பல்கலைக் கழகங்களின் (வெளிநிலை) விரிவுரைகள்
கல்வியாண்டு 1986 | 87
பேராதனை, கொழும்பு,
ஸ்ரீ ஜெயவர்த்தனபுர
பல்கலைக் கழகங்களின் பாட நெறிகளான
() கலைமாணி
() விஞ்ஞானமாணி
(புள்ளி விபரவியல்)
() சட்டமாணி
() வணிகமாணி.

க.பொ.த. (உயர்தர) 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம். விபரத்திரட்டையும் விண்ணப்பப்படிவத்தினையும் ரூபா 5-00 செலுத்தி நேரில்/தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்களுக்கு:
உதவிப் பதிவாளர்,
பட்டப் படிப்புகள் கல்லூரி
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

இடநெருக்கடி காரணமாக கலை முதற் தேர்வில் 150 மாணவர்களுக்கும், வணிக முதற் தேர்வில் 50 மாணவர்களுக்கும் அனுமதிகள் வழங்கப்படுவதால் இன்னும் கலை முதற் தேர்வுக்கு 40 மாணவர்களும் வணிக முதற் தேர்வுக்கு 15 மாணவர்களும் மட்டுமே அனுமதிக்கப்படுவர். எக்காரணம் கொண்டும் இரண்டாவது பிரிவு ஆரம்பிக்கப்படமாட்டாது என்பதை அறியத்தருகின்றோம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சீரிளமைத் திறம் குன்றா செந்தமிழ்

# செந்தண்மையால் சிறந்த முந்துமொழி

## புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி கலைகளிற் கனியும் கன்னிக் கவின் மகள்

திருமதி பாலாம்பிகை நடராஜா

தொன்மையும் இனிமையாம் தன்மையும் தண்மையும் படைத்த மொழி எது என்று ஆராய்ந்து பார்த்தால் அந்த மொழி தமிழ் என்றே புலனாகும்.

முற்காலத்தில் தமிழ் மொழியிலே அடங்காத பற்றும் வேட்கையும் கொண்டு அமிழ்த ஊற்றுப் போன்ற தமிழாகிய இனிய புனலில் மூழ்கி விளையாடிய புலவர்கள் அனேகர்.

தமிழ் மொழியிலே மூன்று ஓசைகள் உண்டு. வல்லோசை, மெல்லோசை, இடையோசை என்பனவே அவை. வல்லோசையில் 'த' வும், மெல்லோசையில் 'மி' யும் இடையோசையில் 'ழ்' என்ற மூன்று எழுத்துகளும் சேர்ந்து தமிழ் என்று வந்தது.

இளமை நலம் மாறாத கன்னித் தீந்தமிழ் அரும் பெரும் கருத்துக்களை எல்லாம் சுருங்கிய சொற்களால் விளக்கும் சிறப்புடையது. சுருங்கிய சொற்களால் கருத்துக்களை விளக்கும் நூல்கள் திருக்குறள், சிவஞான போதம் என்பன. இந்த இரு நூல்களும் தமிழின் கண்கள் போன்றவை. பரத கண்டத்திலே ஆதி காலம் தொட்டு வழங்கிய பாஷை சமஸ்கிருதமும் தமிழுமாம். இந்த இரு பாஷைகளும் பிறந்த வரலாறே ஒரு தனி மகிமை. சமஸ்கிருதம் சிவபெருமானிடத்தும் தமிழ் சுப்பிரமணியக் கடவுளிடத்தும் உற்பவித்தன என்னும் ஐதிகப் பிரமாணங்களே இதற்குச் சான்றாகும்.

தென் மொழியாகிய தமிழை இலக்கணம் செய்தவர் குட முனிவராகிய அகஸ்தியர். காலத்தினால் ஒன்றுக்கொன்று சமத்துவமுடையதென்பதற்காகவே சமஸ்கிருதத்தை வடமொழி என்றும் தமிழை தென்மொழி என்றும் பகின்றனர்.

காசியில் இருந்த வடமொழிச் சங்கத்தாரின் இறுமாப்பை அடக்கும் பொருட்டு அகஸ்தியர் பொதிய மலையில் தவம் புரிந்து முருகப் பெருமானிடம் வரம் பெற்று தமிழுக்கு இலக்கணம் செய்து வடமொழி நூலாரைத் தலை கவிழச் செய்தார் எனின் தமிழின் மகிமையை வேறு சொல்லவும் வேண்டுவதில்லை.

ஆதி காலத்து ஆரியரோடு சமஸ்கிருதம் இமயமலைக்கு அப்பால் இருந்து வந்ததெனவும் ஆரியர் வடபாற்புகுந்து தேசங்களைக் கைப்பற்றிய போது, அங்கே அவர்களுக்குக் கீழ்ப்பட்டிருக்க விரும்பாமல், வட பகுதியை விட்டு தமிழர் தென்திசை வந்து தமக்குள்ளே சேர, சோழ பாண்டிய ராஜ்யங்களை ஏற்படுத்தினார்கள் என்றும் வரலாறுகள் கூறுகின்றன. இக் கூற்றை நோக்குங்கால் இந்தியாவுக்கு ஆதிபாஷை தமிழென்றே முடியும்.

பெரும் அறிஞர்கள் ஒன்று கூடி சங்கம் அமைத்து ஆய்ந்து அலசி உவந்த மொழி செந்தமிழ். இதனால் சங்கத் தமிழ் எனவும் வழங்கப்படுகிறது. 'சங்கத்தமிழ் மூன்றும் தா' என்று ஔவையார் சொன்னதாலும் அறியலாம்.

சங்கத்தமிழ் இயல், இசை, நாடகம் என மூன்று பிரிவுகளாக இருப்பதால் முத்தமிழ் எனப்படும். சத் - சித் - ஆனந்தம் என்று இறைவனுக்கு மூன்று இயல்புகள் உள: சத் - இயல், சித் - இசை, ஆனந்தம் - நாடகம். எனவே தமிழ் சச்சிதானந்த மயமாகவன்றே விளங்குகின்றது.

'முந்து தமிழ் மாலை கோடிக்கோடி' என்று அருணகிரிநாதர் பாடியதற்குப் பொருள் என்ன என்பதை அறிந்திருப்பது அவசியம். க - ட - த - ப என்ற சொற்கள் பிற மொழிகளில் கடுமையாக ஒலிக்கும் தன்மை உடையது.

'க' என்பதை G, 'ட', என்பதை D, 'த' என்பதை Tha, 'ப' என்பதை B என்று வன்மையாக கனமாக மற்ற மொழிகளில் கூறப்படும். தமிழ் மொழியில் இந்த வன்மை கிடையாது. மென்மையாகவே இச் சொற்கள் ஒலிக்கும்.

முந்து தமிழைப்பற்றி இதோ ஒரு அழகான விளக்கம். கனமானவனும் மென்மையானவனும் ஒரு தலத்தை நோக்கி நடந்தனர். கனமானவன் நடக்கக் கஷ்டப்பட்டு பின்தங்கிவிட, மென்மையானவன் வேகமாக நடந்து முந்தி தலத்தை அடைந்து விட்டான். அது போலவே கனமான மொழிகள் பிந்தவும், மென்மையான தமிழ் இறைவனுடைய செவியிலே முந்தி ஒலிக்கும். இதையிட்டே முந்து தமிழ் என்றார் அருணகிரிநாதர்.

தமிழின் அடுத்த சிறப்பான அம்சம், நாம் நெடுநாள் வாழ்வதற்கு உதவுகிறது. பிராணவாயு தான் நமது வாழ்வு. இந்தப் பிராணவாயுவை அதிகமாகச் செலவழித்துக் கொண்டிருந்தால் சீக்கிரமாக மாண்டு விடுவோம். அதனை அளவாகச் செலவழித்தால் நெடுங்காலம் வாழலாம். இதைத் திருமூலர் கூறுகிறார். மூலதனமான மூச்சுக் காற்றை அதிகம் செலவழியாமல் இருக்கவைப்பதற்கு தமிழ் மொழி துணை நிற்கிறது. எப்படி? அதாவது க-த-ட'-ஐ என்ற கனமான பிறமொழி உச்சரிப்பால் சிறுகச் சிறுக ஆயுள் தேய்கிறது. மென்மையான இனிய தமிழ் பேசினால் மூச்சுக் காற்று காப்பாற்றப்படுகின்றது. உதாரணமாகத் தமிழுக்கே உரித்தான புனிதமான சொல் அம்மா. அம்மா என்று சொல்லிப் பார்த்தால் அதில் பிராணவாயு அடங்குகிறது. வாயைத் திறந்தால் 'அ' வருகின்றது. வாயை மூடினால் 'ம்' வருகின்றது. மீண்டும் வாயைத்திறந்தால் 'மா' வருகிறது. முதல் வாயைத் திறந்து பின் மூடித் திறப்பதால் பிராண வாயு சேதமடையாமல் காப்பாற்றப்படுகின்றது. இது போல் அநேக தமிழ் பதங்களில் இந்தச் சிறப்புண்டு. எனவே தமிழ் வாழவைக்கும் தெய்வீக மொழி.

இது எதனால் என்றால் தமிழே முருகன். முருகனே தமிழ். தமிழில் 12 உயிர் எழுத்துக்கள். முருகவேளுக்கு 12 தோள்கள். முருகனின் ஒவ்வொரு முகத்திலும் 3 கண்கள். ஆறு முகங்களிலும் 18 கண்கள். சிவனும் முருகனும் வேறல்ல. எனவே முருகனுக்கும் மூன்று கண்கள். தமிழில் மெய் எழுத்துக்கள் 18. அடுத்து முருகனுக்கு முகங்கள் 6. தமிழ்இனம்- 6. அவை வல்லினம் – 6 மெல்லினம் – 6. இடையினம் – 6. இனி எத்தெய்வத்திற்கும் இல்லாத மென்மை உடையது முருகன் கை வேல். இது போன்று எந்த ஒரு மொழிக்கும் இல்லாத ஆயுதம் தமிழுக்கே உண்டு. வேல் ஆகப்பட்டது இச்சா, கிரியா, ஞானம் என்ற மூன்று தன்மை உடையது போல தமிழில் 'ஃ' (அகேனம்) மூன்று புள்ளிகளை உடையது. இதுவே முருகன் வெற்றி வேல். இத்தனை ஒற்றுமைகளால் முருகனே தமிழ். தமிழே முருகன் என்று உணரலாம்.

சேரமான் பெருமாள் நாயனாராலும் காரைக்காலம்மையாராலும் திருக்கயிலாயம் வரை சென்று வெற்றி பெற்ற மொழி தமிழ் ஒன்றேயாகும். 'தமிழ்பாடு' என்று சிவபெருமான் நம்பியாரூரருக்கு 'பித்தா பிறை சூடி' என அடி எடுத்துக் கொடுத்துப் பாடச்சொன்னது தெய்வத் தமிழில் தான். இது மட்டுமா? சேக்கிழாருக்கு 'உலகெலாம்' என்றும், அருணகிரிநாதருக்கு 'முத்தைத் தரு' என்றும் தமிழிலே இறைவன் அடியெடுத்துக் கொடுத்ததும் மேலும் அம்மையின் அமுதை உண்ட பிள்ளை பாடியதும் செந்தமிழில் தான். சிவனுக்குக் கந்தப் பெருமான் 'ஓம்' என்ற தனி மந்திரத்தை உபதேசித்ததும் தமிழில் தான். 'கொஞ்சித் தமிழைப் பகர்வோனே' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நம் காதுகள் தமிழ் ஓங்காரம் போல் அமைந்திருப்பதையும் கவனிக்கலாம். ஆடும் மயில், திருமாலின் சங்கு, விநாயகன் திருமுகம், கொன்றை மலர் ஆகியன எல்லாம் தமிழ் ஓங்கார வடிவிலே அமைந்துள்ளன.

இன்னும் எலும்பைப் பெண்ணாக்கியது தமிழ். முதலை உண்ட மதலையை உயிர் பெறச் செய்தது தமிழ். பாம்பால்மாண்ட பாலனைஎழுப்பியதுதமிழ், பேசாத ஊமையைப் பேசச் செய்தது தமிழ்.

இவ்வண்ணம் தமிழின் மகத்துவத்தைப் பற்றிக் கூறத் தொடங்கினால் அதற்கு முடிவே இராது. 'யாமறிந்தமொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்' என்று அதன் இனிமையையும் தண்மையையும் உணர்ந்து பாரதியார் பாடினார்.

இயல், இசை, நாடகம் என்ற மூவகைத் தமிழையும் முன்னாளில் முனிவர்களும் மன்னர்களும் பாணர்களும் புலவர்களும் சைவ நாயன்மார்களும் வைஷ்ணவ சமய ஆழ்வார்களும் முன்னின்று வளர்த்தனர். 'தமிழோடிசை பாடல் மறந்தறியேன்' என்றார் திருநாவுக்கரசர்.

சர்வ பூஷணங்களோடு விளங்கி நின்ற தமிழ் அன்னையின் வளர்ச்சிக்குரிய அரச பரிபாலனம் குறைந்து விட்டது. ஆதீன பரிபாலனம் இல்லாவிடில் தமிழ் மிகவும் குறைந்து விடும். தமிழ் மகிமை இவர்களாலேயே நிலைபெற்று நிற்கின்றது. தமிழ் வளர்ச்சிக்காக தமிழ் விழா நடைபெற்று வருகின்றது.

சங்கத் தமிழில் ஈழ நாடு என்பது இலங்கையின் பெயர். ஈழவள நாட்டிலே தமிழ் மணம் கமழும் தொன்னகரம் யாழ்ப்பாணம், மன்னார், வன்னிப் பகுதிகளிலும் திருகோணமலை, மட்டக்களப்பு என்ற கிழக்குப் பகுதிகளிலும் பழைய காலம் தொட்டு தமிழ் மக்கள் வாழ்ந்து வந்தனர். கடல் கடந்து பல நாடுகளுக்கும் பரவி ஒளி வீசும் செந்தமிழை, முச்சங்க வாழ்வுடனிருந்த தீந்தமிழை, 'சூழ்கலி நீங்க தமிழ்மொழி ஓங்க துலங்குக வையகமே' என்று வாழ்த்தி, வளர்க என்று போற்றி இடையூறுகள் யாவும் அகல்வதற்கு தமிழ் தந்த சுப்பிரமணியக் கடவுளை வேண்டுவோமாக.

### ஒய்வே கொடுத்து அனுப்பிவிட்டார் அம்மானே!

பென்சன் எடுக்க வந்த முதியோர்க்குப்
'பென்சன் கொடுத்தே' அனுப்பிவிட்டார்
அம்மானே.
தஞ்சமென வந்தவர்க்கு நஞ்சைப்
பருக்குதல் போல்
பென்சன் கொடுத்தே அனுப்பிவிட்டார்
அம்மானே.
ஒய்வூதியத்தை எடுக்கவந்த 'பென்சனர்க்கு'
ஒய்வே கொடுத்து அனுப்பிவிட்டார்
அம்மானே.
அஞ்சு மணிக்குக் கியூவிலே நின்றவர்க்கு
அஞ்சக் கொடுமை செய்துவிட்டார்
அம்மானே.
போராளி என்றார்கள்! தேடுகிறோம்
என்றார்கள்
நேராக நின்றவரை ஏன் கொன்றார்
அம்மானே.
சீருடையை மாட்டிவிட்டுச் சீலங்காச்
சேனையதன்
சீருடைக்கின்றாரே, என் செய்வோம்
அம்மானே!
'தர்மிஷ்டம்' என்றார்! தமிழிலே தர்மம்
என்றார்!
தம்மிஷ்டம் போலே நடந்திடுவார்
அம்மானே!

பா. சத்தியசீலன்.

உருவகம்

## வெறுமை

நாக. பத்மநாதன்

அன்று வெள்ளிக்கிழமை. மறுதினம் ஓய்வு நாள் என்பதனாலோ என்னவோ அந்த அலுவலகம் ஒரே சந்தடிப்பட்டுக் கொண்டிருந்தது.

அலுவலகங்களில் மக்கள் உப பாத்திரங்கள். கடிதங்களும் காகிதங்களும்தான் முக்கிய கதாபாத்திரங்கள். சில இடங்களில் எஜமானர்கள் என்று கூடச் சொல்லலாம்.

'அனுமதியின்றி உட்செல்லக் கூடாது' என்ற காகித அட்டையைப் பார்த்துவிட்டு மக்கள் வெளியில் நிற்பார்கள்.

இறக்குமதி அனுமதிப் பத்திரம் தன் காலை எடுத்து மொத்த வியாபாரியின் கைக்கு வந்ததும் அவனது உள்ளம் துள்ளிக் குதிக்கும்!

உனது வேலை ரத்தாகிவிட்டது என்ற கடிதம் வெளிக்கிடுமேல் அதன் முன் மனிதன் கதிகலங்கி நிற்பது இயல்பு.

கணக்கு வழக்குப் பத்திரங்கள் இன்னொரு புறம். இவ்விதம் பல. இவைதான் அந்த அலுவலகத்தின் ஆட்சியாளர்கள்.

இவ்விதம் அந்த வேலை நாள் கழிந்தது. மறுநாள் ஓய்வுநாள்.

எனவேதான் ஓடாத மின்விசிறிகளும் வெளித்த மேசை வரிசைகளும் கண்ணுக்குத் தெரிகின்றன. அங்கு கதிரையின் காலடியில் ஒரு குப்பைக் கூடை.

கிழித்தும் கசக்கிச் சுருட்டியும் தள்ளப்பட்ட காகிதங்களே அக் குப்பைக் கூடைக்குள் திணிபட்டுக் கிடக்கின்றன. எரிந்து நார்ந்த நெருப்புக் குச்சிகளும் சில கடலைக் கோதுகளும் கூடைக்குள் சேர்ந்துள்ள கூட்டாளிகள். ஒரு அமுக்க சமநிலை அங்கு நிலவ மேலே சுவர்க்கடிகாரம் மட்டும் தன் கடமையைப் புரிகிறது.

மறுநாளல்ல மறுமாத ஆரம்பமும் எதிர் வந்துவிட்டது. வேலையாளின் கரம் குப்பைக் கூடையைத் தூக்குகிறது. கூடை கட்டடத்தின் ஒதுக்குப் புறத்தில் வைக்கப்பட்டது. அங்கு மேலும் சில கூடைகளும் துடைப்பங்களும் கிடந்தன.

எந்த உயிரும் முற்றாகச் செத்து விடுவதில்லை. ஒவ்வொன்றும் ஏதோ ஒரு நிலையில் உயிர் வாழ்கின்றது. அங்கும் அப்படித்தான்.

கூடையைக் கொண்டு வந்தவன் கையை விட்டு காகிதம் சிலவற்றை வெளியிற் போட்டான். பின்னர் கூடையைக் கவிழ்த்து தரையில் ஒரு குத்து! காகிதம் அவ்வளவும் கீழே வீழ்ந்தன. எனினும் ஓர் அசையா நிலையில் அவை இருந்தன. ஒரு சத்தமும் அங்கில்லை.

வினாடிகள் சில கழிந்தன. ஒரு முனகல் எழுந்தது. அது ஓலமாய் வளர்ந்தது.

எல்லாக் காகிதங்களும் சும்மா இருந்தன. அந்த ஒன்று மட்டும் நெஞ்சத்தால் ஓலமிட்டு அழுதது.

'ஏன் அழுகிறாய்?'

(7 ஆம் பக்கம் பார்க்க)

# தாயகத் தலைவரெல்லாம் ஒன்றாக வேண்டும்

# ஆதிக்கப் போட்டிகளால் குறிக்கோள் குலையும்

## கோவூர்கிழார் பாவினால் இடித்துரை

(இலக்கியக் காட்சிகள்)

★ திருச்செந்தூரன் ★

'தம்பியுள்ளான் சண்டைக்கு அஞ்சான்' என்பது முதுமொழி. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற ஒற்றுமை முழக்கம் எழுந்த தாயகத்திலே அண்ணனும் தம்பியும் பிளவுபட்டு நின்றனர். இதனால் இருவருமே பலவீனம் அடைந்தனர். ஊர் இரண்டு பட்டதால் எதிரிகளுக்குக் கொண்டாட்டம். எதிரிகள் தாயகத்தைக் கவர்ந்து, தாயக மக்களை அடிமையாக்கி, பேரரசு விரிவாக்கத்துக்கு முனைந்து நிற்கும்போது, அண்ணனும் தம்பியும் தமக்குள் போரிடலாமா? குடிமக்கள் இதனை விரும்புவார்களா? உட்பூசல்களால் தாயகத்து வீரர் தமக்குள் போரிட்டுப் பயனின்றி அழிவது தாயகக் குடிகளுக்கு பெருங்கவலையைத் தந்தது. அவர்களது ஓலம் தாயகக் குழுத் தலைவர்களுக்குக் கேட்குமா? குடிமக்கள் செய்வதறியாது திகைத்து நின்றனர். உட்பகை வளர்ந்து கொண்டேயிருந்தது. தாயகத்து வீர மறவர்களுட் பலர் ஆதிக்கப் போட்டியில் வீணே மடிந்து கொண்டிருந்தனர்.

ஒரு சமுதாயத்தின் வரலாற்றுப் போக்கை உருவாக்குவதில் தொலைநோக்கும் துணிவும் மிக்க புலவர்களுக்கு – அறிஞர்களுக்கு - பெரும்பங்கு உண்டு. உண்மை நிலையை செவி கைப்ப எடுத்துரைத்துத் தலைவர்களைத் திருத்தும் ஆற்றல் அவர்களிடமே இருந்தது.

புலவர்கள் தலைவர்களிடம் சென்று பரிசில் பெற்றுத் தமது வறுமையைப் போக்குவதோடு தமக்குக் கிடைத்ததைப் பங்கிட்டு அயலவர்களுக்கும் அளித்து இன்பம் காண்பவர்கள். பெற்றதை எல்லாம் இழந்து மீண்டும் வெறுங்கையராகி, இழப்பதற்கு எதுவுமற்ற நிலையில் மீண்டும் தலைவர்களை நாடிச் செல்பவர்கள்.

கோவூர் கிழார் சோழ நாட்டில் வாழ்ந்த புலவர். ஒன்றுபட்ட சோழ நாட்டைத் தந்தையாகிய சோழன் ஆண்டபோது இளைஞராகப் பெருமையோடு வாழ்ந்தவர். தந்தை மறைந்தபோது ஆட்சி அதிகாரம்யாருக்கு என்ற போட்டி மக்களான நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்குமிடையே ஏற்பட்டது. இப்போட்டியில் ஒன்றுபட்ட சோழர் தாயகம் இரண்டானது. தாயக மறவர்கள் இரண்டாகப் [illegible] ஒருவாறு அமைதி ஏற்பட்டது. ஆனாலும், நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் இடையே ஏற்பட்ட பகைமை நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கிடந்தது. ஒரு பகுதியினர் மறுபகுதிக்குள் செல்ல முடியாத நிலை. சென்றால் கண்ட துண்டமாக வெட்டிக் கோரமாகக் கொல்லப்பட்டார்கள்.

சோழன் நலங்கிள்ளியின் ஆட்சிப் பகுதியிலிருந்து நெடுங்கிள்ளியிடம் இளந்தத்தன் என்ற புலவர் வந்தார். நலங்கிள்ளியின் ஒற்றன் என மயங்கிய நெடுங்கிள்ளி அவரைக்கொல்லப்போனான். அப்போது கோவூர் கிழார் தலையிட்டு, இரவலனான புலவரின் நிலையை விளக்கி அவரைக் காத்தார். நலங்கிள்ளி - நெடுங்கிள்ளி போட்டியினால் சோழநாட்டில் ஏற்பட்ட அவல நிலைகண்டு வருந்தினார்.

இனியும் பொறுத்தால் தாயகம் அயலவருக்கு இரையாகிவிடும் என்பதை உணர்ந்த கோவூர் கிழார் நெடுங்கிள்ளியை [illegible] ஒற்றுமைப்படுத்த முடிவு [illegible] ருக்கு ஏற்பட இருந்த அவலம் தமக்கும் ஏற்படுமே என்று அவர் அஞ்சவில்லை.

புலவர் புலிக்கொடி ஏந்திய நெடுங்கிள்ளியிடம் சென்றார். அவனுடைய உள்ளத்தில் உறைக்கும்படியாக உண்மை நிலையை எடுத்துரைத்தார்.

'அரசனே, உன்னோடு போர் புரிபவன் உயர்ந்த பனைமரத்தின் பூவைச் சூடிய விற்கொடியோனாகிய சேரன் அல்லன்; பெரிய வேப்ப மரத்தின் பூவைச் சூடிய மீனக் கொடியோனாகிய பாண்டியனும் அல்லன். நீ அணிந்திருக்கும் மாலையும் ஆத்திப்பூ நிறைந்தது. உனது பகைவன் அணிந்திருக்கும் மாலை ஆத்திப்பூச் செறிந்ததே. உங்களில் யார் தோற்றாலும் புலிக்கொடியுயர்த்திய சோழர் குடியே தோற்கப் போகிறது.

எந்தப் போரிலும் போரிடும் இரு அணியினரும் வென்றதில்லை. எனவே, 'சோழர் குலப் பெருமையை நானே காப்பேன். சோழர் தாயகத்தை நானே' காத்திடுவேன்' என்று நீங்கள் இருவரும் கூறுவது நகைக்கத் தக்கது. இவ்வாறு கூறி உங்களுக்குள் போரிடுவது தக்கது அன்று. ஆகவே, உட்பகையை விலக்கிவிட்டுப் பொது எதிரியிடம் தாயகம் வீழ்ந்துவிடாது காக்க ஒன்றுபடுங்கள்,

இவ்வாறு நெடுங்கிள்ளியிடம் கோவூர்கிழார் எடுத்துரைத்தார்.

புலவர் புலிக்கொடி ஏந்தி, ஆத்திமாலை அணிந்த நலங்கிள்ளியிடமும் சென்று ஒற்றுமையே பலம் என்பதை இடித்துரைத்தார்.

தாயகத்து நன்மையைப் புறந்தள்ளி, தமக்குள் நேர்ந்த சின்னஞ்சிறு பகைகளைப் பெரிதாக்கி முட்டிமோதிய தாயகப் போட்டிக் குழுக்கள் ஒன்றுபடவேண்டியதன் இன்றியமையாமையைக் கூறும் பாடல் வீரயுக இலக்கியமாகக் கருதப்படும் புறநானூற்றின் 45 ஆம் பாடலாக அமைந்துள்ளது. அப்பாடல் இது தான்:

இரும்பனை வெண்தோடு மலைந்தோன் அல்லன்
கருஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்
நின்ன கண்ணியும் ஆர்மிடைந் தன்றே
நின்னொடு
பொருவோன் கண்ணியும் ஆர்மிடைந் தன்றே
ஒருவீர் தோற்பினும் தோற்பதுஉம் குடியே
இருவீர் வேறல் இயற்கையும் அன்றே
அதனால்,
குடிபொருள் அன்று நும் செய்தி கொடித்தேர்
நும்மோர் அன்ன வேந்தர்க்கு
மெய்ம்மலி உவகை செய்யும் இவ்விகலே.

(இரும்பனை வெண்தோடு மலைந்தோன் - உயர்ந்த பனைமரத்தின் தோடு போன்ற வெள்ளைப் பூக்களாலாய மாலையணிந்த சேரன்; கருஞ்சினை வேம்பின் தெரியலோன் - பெரிய வேப்பமரத்தின் பூக்களாலாய மாலையை அணிந்த பாண்டியன்; நின்ன – உனது; ஆர்-ஆத்தி; பொருவோன்- எதிர்த்துப் போரிடுவோன். வேறல் – வெல்லுதல்; மெய்ம்மலி - உடம்பு பூரிக்கும்படியான; இகல் – போர்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னப் பறவைகள்

த. வைத்திலிங்கம்



**அத்தியாயம் 4**
**(தொடர்ச்சி)**

இதற்கிடையில் கேற் வாசலில் சைக்கிள் மணி கேட்டது. திலகம் எட்டிப் பாத்தாள்.

பேப்பர்காரன் அன்றைய தினசரியை எறிந்து விட்டு, சென்ற மாதக் காசுக்கான ரசீதை நீட்டினான்.

'நான் வாறன், அதுக்குள்ளை பேப்பரை எறிஞ்சு போட்டு நிற்கிறாய் என்ன!'

திலகம் கூறிவிட்டு குனிந்து பேப்பரைக் கையில் எடுத்துக் கொண்டு அவனிடமிருந்து ரசீதைப் பெற்றுக் கொண்டாள்.

பேப்பர்காரப் பையன் சிரித்துக் கொண்டு நின்றான்.

'சரசு பேப்பர் காசாம் எடுத்துக் கொடு!'

சொல்லிக் கொண்டே திலகம் சரசுவின் அறைக்குள் நுழைந்தாள்.

திலகத்தைக் கண்ட சரசு திடுக்கிட்டு எழுந்தாள்.

அவள் அவசரம் அவசரமாக ஏதோ ஒரு கடிதத்தை மேசையிலுள்ள புத்தகத்தினுள் மறைக்க முற்பட்டாள். சடாரென்று கடிதத்தினின்றும் இருந்து ஒரு போட்டோ கீழே வீழ்ந்தது.

இது யாருடைய போட்டோ?

கேட்டுக் கொண்டே திலகம் கீழே குனிந்து போட்டோவை எடுத்துப் பார்த்தாள்.

சரசு இதை எதிர் பார்க்கவில்லை.

அவளின் முகம் வெளிறிப் போய் விட்டது.

'அதை இஞ்சை கொண்டா!'

வெடுக்கென்று திலகத்தின் கைப்பிடியிலிருந்து போட்டோவைப் பறித்தெடுத்தாள்.

'இப்ப என்ன வேணும்? ஏன் கத்திறாய்?

சரசுவின் கேள்வி சம்பந்தமில்லாமல் இருந்தது.

'நான் கத்தவில்லை! பேப்பர்காரப் பெடியன் வந்திருக்கிறான். போன மாதக் காசாம் கொடு!'

சரசுவின் ஏற்பாடு தான் பேப்பர். கனகசபை பக்கத்தில் உள்ள கோயிலடி வாசிகசாலைக்குப் போய் பேப்பர் எல்லாம் படித்து விடுவார்.

சரசு தான் உத்தியோகம் பார்க்கத் தொடங்கியது முதல், மாதா மாதம் பேப்பருக்கான பணம் கொடுத்து வருகிறாள்.

ரசீதை மேசை மேல் வைத்து விட்டு திலகம் மௌனமாக அறையை விட்டு வெளியேறினாள்.

அவளுக்கு சரசுவின் செய்கை வியப்பைத் தந்தது.

ஏதோ கடிதத்தை மறைக்கிறாள்; கீழே விழுந்த போட்டோவை இழுத்துப் பறிக்கின்றாள்;

இதென்ன சங்கதி...... திலகத்துக்குப் புரியவில்லை.

'சரி ஆறுதலாய் அவளைக் கேட்போம்' – தனக்குள் சொல்லிக் கொண்டே மீண்டும் அடுக்களைக்குள் நுழைந்தாள்.

'அவள் என்னடி செய்கிறாள் அங்கை? நான் கூப்பிடக் கூப்பிட பேசாமல் இருக்கிறாள்!'

பூரணம் கோபமாய்க் கேட்டாள்.

பூரணத்துக்கு காலையில் இருந்தே ஒரே எரிச்சலும் ஆத்திரமும்.

காலையில் எழும்பும் போதே அவளுக்கு ஒரே அசதியாய் இருந்தது. இப்பொழுது கொஞ்ச நாட்களாய் அவளுக்கு உடம்பு சரியில்லை.

வயது ஏற ஏற இயற்கை ஏற்படுத்தும் பருவ மாற்றங்கள் அவளை அசதியுறச் செய்தன.

'என்ன காலமை தொடக்கம் அனுங்கிறாய்!' – கனகசபை கேட்டார்.

அவருக்குக் காலையில் தேனீர் வழமையான நேரத்துக்குக் கொடுபடவில்லை.

ஸ்நானமெல்லாம் முடிந்து திலகம் தேனீர் தயாரிக்க நேரமாகி விட்டது. விரத நாட்களில் அதுதான் வழமை.

இது கனகசபைக்கு எரிச்சல்!

அவருக்குக் கோபம் திடீர் திடீரென்று வந்து விடும்.

இப்பொழுது தன் மனைவி பூரணம் நின்ற நிலை அவருக்குப் பிடிக்கவில்லை.

'அது டாக்குத்தரிட்டை ஒருக்கா காட்டித்தான் மருந்து எடுக்க வேணும்'

பூரணம் கூறினாள்.

'இப்ப எனக்குச் செலவு வைக்கப் போறாய் போலை இடக்கு!

பேசாமல் இரண்டு பனடோலைப் போட்டுத் தண்ணியைக் குடி! எல்லாம் சரியாய் போகும்,

இது பனடோல் போட்டுச் சரி வராது. டாக்குத்தரிட்டைத்தான் போக வேணும். இண்டைக்கு வேண்டாம். நாளைக்கு ஒருக்காப் போவம்.

'உனக்கு என்ன வியாதியெண்டு சொல்லனப்பா! தெரியாமல் தான் கேட்கிறேன்!'

'அது உங்களுக்குச் சொன்னால் விளங்காது. நீங்கள் பேசாமல் போங்கோ!'

'நீ என்னவாகிலும் செய்!'

கனகசபை துவாயைத் தோளில் எடுத்துப் போட்டுக் கொண்டு அறையை விட்டு வெளியேறியவர் திரும்பி வந்தார்.

'அவள் திலகத்திட்டை சொல்லி கொஞ்சம் தூதுவளம் இலை வைச்சு சம்பல் அரைக்கச் சொல்லப்பா! ராமுழுதும் ஒரே நெஞ்சுச் சளி!'

பூரணத்தைப் பார்த்துக் கூறினார்.

'ஓ! அது சரி! உங்களுக்கு நோய் நொடி வந்தால் தாங்கமாட்டியள்! நாங்கள் ஏதும் வைத்தியம் கேட்டால் தான் ஏறிப்பாயுங்கோ! இரக்கமில்லாத ஆம்பிளையள்...!'

பூரணம் முணுமுணுத்தாள்.

பதிலுக்கு அவர் ஏதோ இல்லாததெல்லாம் கூறிப் புறுபுறுத்தார்.

'தயவு செய்து கொஞ்சம் பேசாமல்போங்கோ! போய் தோய்ஞ்சு குளிச்சு விரதத்துக்கு சாப்பிடுகிற வழியைப் பாருங்கோ! போங்கோ... மற்ற வீடுகளிலை ஆம்பிளையள் வயது போன நேரத்தில் கோயில் குளமெண்டு மாயுதுகள்! நீங்கள் வீட்டுக்குளை இருந்து இரும்புப் பெட்டியைக் கட்டிப் பிடியுங்கோ...!'

பூரணத்துக்கு அழுகை கூட வந்தது.

இடைக்கிடை இப்படிப்பட்ட பிணக்குகள் தாராளமாக இடம் பெறும். பணச் செலவு வருகிற விஷயமென்றால் கனகசபைக்குப் பிடிக்காது.

## இரு மாத குறுநாவல்

சரசுவுக்கு தனது செயல் மிகுந்த வெட்கத்தையும் மனவருத்தத்தையும் அளித்தது.

திலகத்திடம் எரிந்து விழுந்து ஒரு தேவையில்லாத செயல் என்று உணர்ந்தாள்.

தினமும் ஏதோ விதத்தில் சந்திக்கின்றனர். நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டு இருப்பார்கள். ஆனாலும் அவன் இடைக்கிடை கடிதம் எழுதி இவளிடம் கொடுப்பான்.

தனது காதல் விவகாரத்தைத்திலகத்திடம்கூற ஒரு சந்தர்ப்பத்தை எதிர் பார்த்திருந்தாள்.

இன்று எதிர்பாராத விதமாக கடிதத்துள்ளிருந்து கீழே வீழ்ந்தபோட்டோவை திலகம் பார்த்து விட்டாள்.

எப்படியாவது இது ஒரு நாளைக்கு வெளியே வரத் தானே போகின்றது.!

இந்த ஒரு அசட்டுத் துணிச்சலில் சரசு ஒரு மௌன நாடகம் தனக்குள்ளேயே ஆடிக்கொண்டிருந்தாள்.

மாலைப்பொழுது. பால் எல்லாம் கறந்து முடிந்தபின் மாட்டடியைத் துப்புரவாக்கிக் கொண்டிருந்தாள் திலகம். சரசு மெதுவாக வந்து திலகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள். திலகம் நிமிர்ந்தாள். அவளது பார்வை சலனமற்றிருந்தது ''அக்கா என்னை பன்னிச்சுக் கொள்! நான் காலைமை......'' சரசுக்கு குரல் தளதளத்தது.

திலகம் மௌனமாய் நின்றாள்.

'அந்தப் போட்டோ.... அவர்--- அவர் என்னுடன் தான் வேலை பார்க்கிறார்.'

சரசு தட்டுத்தடுமாறிக் கூறினாள்.

திலகம் அதற்கும் மௌனம் சாதித்தாள்.

'நான் உன்னிடம் இதைச் சொல்லவேண்டுமென்றுதான் இருந்தேன். ஆனால் சந்தர்ப்பம் வரவில்லை.'

திலகத்திடம் மன்னிப்புக் கேட்பது போலிருந்தது சரசுவின் வார்த்தைகள்.

திலகம் ஆதுரத்துடன் தங்கையின் கைகளைப் பிடித்தாள்.

இருவரும் மாட்டுத் தொட்டி விளிம்பில் உட்கார்ந்தனர்.

சரசு தன்னுடைய காதல் விவகாரங்களை எல்லாம் விவரமாகக் கூறினாள்.

திலகம் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு சரசுவைப் பார்க்க பாவமாய் இருந்தது.

'அக்கா, நீதான் அம்மாவிடம் மெல்ல இந்த விஷயத்தைச் சொல்ல வேண்டும்! எனக்கென்னவோ நானாய் போய் சொல்ல பயமாய் இருக்கிறது!'

'சரசு என்னவாய்இருந்தாலும் நீ ஏமாந்து போகாதை! நான் அவ்வளவு தான் சொல்லுவேன்! உனக்கு இந்தக் காலத்து ஆம்பிளையளைப் பற்றித் தெரியாது!'

திலகம் சரசுவை எச்சரித்தாள்.

''இல்லை அக்கா! அவர் அப்படிப்பட்டவர் அல்ல! எனக்கு நல்லாய்த் தெரியும் !'

சரசுவின் முகம் இதைச் சொல்லும் போது ஒரு அசாதாரண நம்பிக்கையில் விகசித்தது.

'உனது நம்பிக்கையை, சிதறடிக்க நான் விரும்பவில்லை சரசு.

ஆனால் கவனமாய் இரு!'

இதைச் சொல்லிவிட்டு திலகம் எழுந்தாள்.

பூரணத்துக்கு நடப்பது எல்லாம் ஒரே குழப்பமாய் இருந்தது.

டண ஆசை ஏற்பட்டு அதிலேயே குறியாய் இருந்து வரும் கணவன்,

பொங்கும் இளமையெல்லாம் வீணாக, திருமணமாகாமல் பொறுமையின் இலக்கணமாக விளங்கும் மூத்த மகள் திலகம்.

வேலை பார்க்கிறேன் என்று சென்று, யாரோ எங்கேயோ, என்ன சாதி சனமோ என்று தெரியாமல் சோடி சேர்த்துக் கொண்டு இதோ எனது காதலன் என்று துணிவுடன் கூறத் தயாராய் இருக்கும் இரண்டாவது மகள் சரசு.

டெனிம் கால்சட்டையும், வட்டக் கழுத்து பெனியனுமாய் திரிந்து தன்னைப்பற்றி மர்மமாகக் காட்டிக் கொள்ளும் அடங்காப்பிடாரியாகத் திரியும் மகன் சந்திரன்!

அவளுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

திலகம் சரசுவின் காதல் விவகாரத்தை ஒரு நாள் ஆறுதலாகப் பூரணத்திடம் கூறிய பொழுது அவள் அதிர்ச்சியும் ஆத்திரமும் அடைந்தாள்.

'சிறுக்கி வரட்டும் இண்டைக்கு! தலைமயிர் ஒட்ட அறுத்துவிடுகிறன். வீட்டுக்குள்ளை இருக்கட்டும்! மாப்பிள்ளை பிடிச்சுப் போட்டு துணிவோடு சொல்லியும் போட்டாள்... !'

'என்ன கதைக்கிறியள் அம்மா! குடிகாரர் பாவிக்கிற பாஷையிலை கத்திறியள்!'

'உனக்குக் கனக்கத் தெரியும்! வாயை மூடு!'

'சரசு வேலை பார்க்கிறவள். ஆம்பிளையளோடு பழக வேண்டிய சூழ்நிலை! ஏதோ நடந்து போச்சு! இனி நடக்க வேண்டிய அலுவலைப் பாருங்கோ... அவ்வளவு தான் நான் சொல்லுவன்!'

'ஓ! அவவுக்கு இப்ப கல்யாணம் இல்லாதது தான் குறை!'

'அம்மா...!'

திலகம் தன் தாயை நேருக்கு நேர் பார்த்தாள்.

உண்மையைச் சொல்லப் போனால்... நீங்கள் இப்ப சொன்னீங்களே... அது உண்மை தான்! கல்யாணம் நடக்க வேண்டிய காலத்திலை நடக்க வேணும். பணம், சாதி எண்டு பார்த்துக் கொண்டே இருந்தால் அவளும் என்னை மாதிரித் தான் சீவியம் முழுதும் இருக்க வேணும். அவள் எண்டாலும் வாழட்டும்...!'

திலகத்துக்குக் குரல் தளதளத்தது.

அவள் முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

பூரணம் தடி கொண்டு தலையில் அடித்தாற் போல் திடுக்கிட்டு நின்றாள்.

கசப்பானாலும் எவ்வளவு பெரிய உண்மையை உடைத்து விட்டாள்.

'திலகம்...'

அழுகை நெஞ்சை அடைக்க மகளின் முதுகைத் தன் கையால் அணைத்தாள்.

திலகம் தன்னைச் சுதாரித்துக் கொண்டாள்.

'அம்மா நீங்கள் வீணாக யோசிக்க வேண்டாம். இனி நீங்களோ அப்பாவோ இதைத் தடுக்க முடியாத அளவுக்கு சரசு நம்பிக்கையை வளர்த்துக் கொண்டிருக்கிறாள். தடுத்து என்ன பிரயோசனம்?

நான் குமராய் இருக்க அவளுக்கு என்ன மாதிரி கல்யாணம் செய்து வைக்கிறதென்று நீங்கள் யோசிக்க வேண்டாம். ஊர் உலகத்திலை இப்ப இது சர்வசாதாரணம். உலகத்துக்குப் பயப்படாதேயுங்கோ...!' எல்லாம் எங்களுடைய மனம் தான்! நீங்கள் பக்குவமாய் அப்பாவுக்கு விஷயத்தைச் சொல்லுங்கோ...!'

(தொடரும்)

# தனிமனித வழிபாட்டு உரிமையை உறுதியாக்க விரும்பும் பாப்பரசர்

- சுந்தரனார் -

தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்த பரிசுத்த பாப்பரசர் ஆற்றிய அருளுரை உலகத் தமிழ் மக்களைப் பூரிக்கச் செய்துள்ளது.

பட்டினத்தார் போன்ற பல தமிழ்ச் சான்றோர்களின் பாடல்களை மேற்கோள் காட்டிக் கருத்துரை வழங்கியிருக்கிறார்.

தமிழ்நாட்டு முதலமைச்சர் எம் ஜி. இராமச்சந்திரன் திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பைப் பாப்பரசரிடம் அன்பளிப்பாக வழங்கி உள்ளார்.

தருமபுர ஆதீனத் தந்தை சுவாமிநாதத் தம்பிரான் பாப்பரசருக்குப் பொன்னாடை போர்த்தி, நெற்றியில் விபூதி அணிந்து கௌரவித்தார்.

பாப்பரசர் தனது அருளுரையில் வழங்கிய ஆன்மீகக் கருத்துக்கள் இதோ:-

பண்டைய சமய மரபுகளின் தொட்டில் இந்தியநாடு இந்திய ஆன்மீகச் சிந்தனைகள் உலகிலே பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன. உலகியல், அழகியல் எண்ணங்களை அவை விஞ்சி நிற்கின்றன.

இந்திய ஆன்மீகச் சிந்தனைகளுக்குக் கத்தோலிக்க திருச்சபை மதிப்பளிக்கிறது சமயப் பொறை, சமயசமரசம், சமயங்களின் ஒருமைப்பாடு ஆகியவை இந்திய கலாசாரத்தின் கூறுகள்.

பல்வேறு மதங்களுக்கிடையே நடைபெறும் கலந்துரையாடல்களும், கருத்துப் பரிமாற்றமும் வேற்றுமையில் ஒற்றுமை காண உதவுகிறது. மக்களின் துன்பியல் அனுபவங்களைப் போக்கும் எமது அரிய பணிக்கு சமயங்கள் தோள் கொடுக்க உதவுகிறது.

சகல சமயத்தலைவர்களும் எவ்வித பயமின்றி, எவ்வித இடையூறும் இல்லாமல் தமது நம்பிக்கைகளின் அடிப்படையில் வாழும் வாய்ப்பினைப் பெறவேண்டும். தனி மனித வழிபாட்டு உரிமை உறுதி செய்யப்படவேண்டும்.

சமய சார்பற்ற சிலம் இந்திய அரசியல் யாப்பின் அணிந்துரையில் சந்தேகத்துக்கு இடமின்றித் தெளிவான வாசகங்களில் விளக்கப்பட்டுள்ளதை உலகு பாராட்டுகிறது.

தேசிய இனங்களை நசுக்கும் முயற்சிகளுக்கு ஒத்துழைக்காதீர்கள். வெறுப்பு, அநீதி, துன்பங்களுக்கு உடந்தை ஆகாதீர்கள்.

இன்றைய உலகிலே பல லட்சக் கணக்கான மக்கள் தமது பாரம்பரிய தாயகத்திலிருந்து விரட்டப்பட்டு உள்ளனர்.

இந்திய தேசமே குரல் கொடு!

அறியாமை, பட்டினி, நோய் காரணமாக உலகிலே வாடுகின்ற மக்கள் எண்ணற்றவர்கள். வேதாகமம் பேசுகின்ற ஏழைகள் யார்?

ஒடுக்கப்பட்ட மக்கள், குருடர்கள், அடிமைகள் படிப்பறிவு இல்லாதவர்கள் மட்டுமல்ல. உணவு, உடை, உறையுள் இல்லாதவர்கள், ஆன்மீக வாய்ப்புகள் மறுக்கப்பட்டவர்களும் ஏழைகளே.

இவ்வாறு அருளுரை பாப்பரசர் முடிவில் வழங்கிய கொஞ்சுதமிழில் பின்வருமாறு கூறினார்:-

நமக்கு மேலே ஒருவன்!
அவன் என்றும்
இறைவன்!
போற்றி! போற்றி!
போற்றி!

* *

## இலக்கிய இரட்டையர்கள்

அமரர் பேராசிரியர் கைலாசபதியையும், பேராசிரியர் சிவத்தம்பியையும் இலக்கிய இரட்டையர்கள் என்று முதன் முதலில் வர்ணித்தது சுதந்திரன் பத்திரிகை.

உருவ அமைப்பில் அவர்களுக்கு இடையில் பொருத்தம் இல்லாத போதிலும் வேறு பல ஒற்றுமை அம்சங்கள் காணப்படுகின்றன.

இருவரும் ஒரே தலைமுறையைச் சார்ந்தவர்கள். சம காலத்தவர்கள். ஒரே பல்கலைக்கழகத்தில் ஒரே துறையில் பயின்றவர்கள் ஒன்றாய்ப் பழகி ஒன்று சேர்ந்து நாடகங்களில் நடித்தவர்கள் இருவரும் பர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் பட்ட மேற்படிப்பு மேற்கொண்டவர்கள்.

பேராசிரியர் கைலாசபதி நாடகங்களை எழுதும் போது பேராசிரியர் சிவத்தம்பியை கருத்தில் வைத்து பாத்திரங்களை அமைப்பார்.

நவீன இலக்கியப் போக்கில் ஒப்பியல் நோக்கில் இருவரும் ஈடுபாடு உடையவர்கள்.

பேராசிரியர் கைலாசபதி நினைவுச் சொற்பொழிவுக்குத் தலைமை வகித்த போது துணைவேந்தர் வித்தியானந்தன் இருவரைப் பற்றியும் இவ்வாறு குறிப்பிட்டார்.

தேன்கூடு

# ஒலிபரப்பு சாதன வருகையால் வாசினைப் பழக்கம் மந்த நிலை

செ. யோ. செல்வராஜா
நூலகர், பொது நூலகம், சங்கானை

கடந்த ஐம்பது வருடங்களாகக் கரைபுரண்டு பொங்கிப் பிரவாகித்துப் பாயும் அறிவுத்துறைகளின் பெருக்கமும் வளர்ச்சியும் மனிதனை, மட்டுமல்ல – சமூகத்தையும் அதன் ஏனைய அம்சங்களையும் வெகுவாகப் பாதித்துள்ளது.

நூலகம் என்பது புத்தகங்கள் சேகரிக்கப்பட்டு வாசகர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் வழங்கும் நிலையம் என்ற கோட்பாடு மாறிவிட்டது. நூலகர் வாசகர்களுக்கு நூல்களைப் பரிமாறுபவர் என்ற நிலையும் பழங்கதையாகி விட்டது. முன்னேற்றமடைந்த நாடுகளில் இன்று நூலகம் என்ற பெயர் மறைந்து தகவல் நிலையங்கள் என்றாகிவிட்டன. பாடசாலை நூலகங்கள் கூட தகவல் சாதன நிலையங்கள் அல்லது கல்வி சாதன நிலையங்கள் (Information resource centre or Educational resource centre) என அழைக்கப்படுகின்றன. நூலகவியல், தகவலியல் என்றாகிவிட்டது.

புத்தகங்களுடன் மட்டும் புழங்கி வந்த நூலகங்களில் இன்று நூல்களின் முக்கியத்துவம் அருகி பலதரப்பட்ட தகவற் சாதனங்களாகிய சஞ்சிகைகள், பத்திரிகைகள், அறிக்கைகள், ஒலிப்பதிவு நாடாக்கள், ஒளிப்பதிவு நாடாக்கள், படச் சுருள்கள், நுண் படச் சாதனங்கள் (Microfilms) ஆகியவை பெருகி விட்டன. நூலகங்களின் முழுமை அங்குள்ள நூல்களின் தொகைகளில்லா– தகவல்களின் சிறப்பிலேயே தங்கியுள்ளது.

வாசகர்கள் இன்று இயற்கை வர்ணனைகளையும் பிரயாண அனுபவங்களையும் விஞ்ஞான தொழில் நுட்ப அறிவுகளைத் தேட நூலகங்களுக்கு ஓட அவசியமில்லை. மணிக்கணக்காய் உட்கார்ந்து பக்கம் பக்கமாய்ப் புரட்டத் தேவையுமில்லை. அறிவுப் புரட்சியின் மிகப் பெரிய தாக்கமும் சாதாரண மக்களின் கைகளுக்கு இலகுவில்

## நூலக இயங்கு முறைகளில் புதிய மாற்றங்கள் வேண்டும்

கிட்டக் கூடியதுமான ஒளிபரப்பு சேவை விசாரிக்கப்பட்ட பின்பு நூல்களின் தேவை பாரிய அளவில் குறைந்து விட்டது.

கதைக்குக் கதை – செய்திக்குச் செய்தி – வர்ணனைக்கு வர்ணனை, கல்வி, அரசியல், சுகாதாரம், விளையாட்டு மற்றும் என்னென்ன துறைகளில் மனிதனது நாட்டம் செல்கின்றதோ அங்கெல்லாம் ஒளிபரப்பு தன் பார்வையைத் திருப்புகின்றது. இந் நிலையில் நூல்களேன்? நூல் நிலையங்களேன்?

எனவே தான் நூலகங்கள் தகவல் வங்கிகளாக (Information Bank) மாறி விட்டன. நெருக்கடியான தனது அன்றாட வேலைகளுடன் போராடும் வாசகனொருவன் தனக்கு உடனடியாகத் தேவைப்படும் தகவலைப் பெற ஒளிபரப்பு நிலையத்திலோ அன்றி வேறெங்குமோ காத்திருக்க முடியாது. நூலகம் தனது முன்னைய நிலையை மாற்றிக் கொண்டு அன்றாட மனிதனின் அவசியத் தகவல்களை உடனுக்குடன் வழங்கி தேவைகளைப் பூர்த்தி செய்ய முன் வருகின்றது. பல்லாயிரக்கணக்கான தகவல்களின் சேமிப்புகளுடன் கூடிய கம்பியூட்டர்கள் மேல் நாட்டு நூலகங்களின் நிறுவப்பட்டுள்ளன. வாசகரொருவர் தமக்கு வேண்டிய தகவலைக் கோரிய மறு கணத்தே குறித்த தகவல் கம்பியூட்டரால் கையளிக்கப்படுகின்றது. வாசகர் தமது பெறுமதியான நேரத்தைச்செலவிட்டுபல்வேறு நூல்களை ஆய்ந்து தகவலுக்காக அலையத் தேவையில்லை.

ஆராய்ச்சியாளர்களுக்கான கிடைத்தற்கரிய நூல்களும் பலர் கை பட்டு சீக்கிரம் பழுதுறக் கூடிய ஓலைச் சுவடிகள், மிகப் பழைய நூல்கள் ஆகியவையும் தற்போது நுண்படச் சுருள்களாக (Micro Film) நூலகங்களில் வைக்கப்பட்டுள்ளன. நுண்பட வாசினைக் கருவியினால் மிக இலகுவில் ஆய்வாளர் தன் தேவையைப் பூர்த்தி செய்கின்றார். இந் நுண்படத் தொழில் நுட்பத்தால் பல்லாயிரம் நூல்களை அடுக்கவும் பராமரிக்கவும் வேண்டிய இட வசதியும் சிரமும் குறைந்து குறுகிய இடத்தில் அதிக நூல்களை வைத்திருக்க முடிகின்றது.

இலண்டன் நகரில் பெரிய விஸ்தாரமான நூலகத்தைப் பராமரிக்க இட நெருக்கடியை உத்தேசித்து புதியதோர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அன்றாட வாசகர்கள், தேவைளுக்கும் மிக அவசியமுமான தகவற் சாதனங்களை மட்டும் நகர நூலகத்துள் வைத்து ஏனையவற்றை நகருக்கு வெளியே புறம் போக்காக பாரிய இடவசதியோடு கூடிய கட்டடத்தே வைத்துள்ளனர். இந்த இரண்டு நிலையங்களையும் நிலத்தின் கீழே அமைக்கப்பட்டுள்ள நகர்வு நாடாக்கள் இணைக்கின்றன. வாசகர் கோரும் நூல் நகர நூலகத்தில் இல்லாவிடின் நகரும் நாடாக்கள் மூலம் உடனுக்குடன் தருவிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன. இத்தகைய ஏற்பாடு நெருக்கடி மிகுந்த உலகின் ஏனைய நகரங்களிலும் பல்வேறுபட்ட மாறுதல்களுடன் கடைப்பிடிக்கப்படுகின்றன.

நம்நாட்டில் ஒளிபரப்பு சேவை அறிமுகம் செய்யப்பட்டதன் பின்னர் சினிமாத் தியேட்டர்களின் முக்கியத்துவம் சடுதியாய் குறைந்துள்ளது. அவ்வண்ணமே நூலகங்களுக்கு வருகை தரும் வாசகர்களின் எண்ணிக்கையில் பாரிய தாக்கத்தை அவதானிக்க முடிகின்றது. வழமையான நூலக நெருக்கடி நேரம் மாலை 5 மணி தொடக்கம் 8 மணி வரையான காலப்பகுதியாகும். இந் நேரத்திலேயே பிள்ளைகள், மாணவர்கள், குடும்பப் பெண்கள், கடமையிலிருந்து களைத்து வரும் ஊழியர்கள், தொழிலாளர்கள் ஆகிய பலதரப்பட்டவர்களும் நூலகத்துக்கு வருகை தருவர். ஆனால் ஆச்சரியமான உண்மை இப்போதுஇந்த நேரங்களில் நூலகம் வெறிச்சோடிக் கிடக்கின்றது. காரணம் ஒலிபரப்பு. அத்துடன் ஒலிபரப்பு அறிமுகப்படுத்த முன்பு மிகவும் பிரபலமாயிருந்த விளையாட்டுச் சஞ்சிகைகள் இப்போது தீண்டுவாரற்றுக் கிடக்கின்றன. ஏன் புனைகதைகள், விஞ்ஞான விறுவிறுப்புக் கதைகள்' காதல் கதைகள், ஜனரஞ்சக சங்கதிகளெல்லாமே இப்போது மிகவும் ஒதுக்கப்பட்டு விட்டன. நூலகங்களில் நாளாந்தம் இரவல் கொடுக்கும் நூல்களின் எண்ணிக்கையில் பெரிய வீழ்க்காடு காணப்படுகின்றது. ஒலிபரப்பின் வருகை இலங்கையில் நூலகங்களைப் பாரிய முறையில் தாக்கியுள்ளது. மக்களின் வாசினை ஆர்வத்தை மிக மிகக் குறைத்துள்ளது. அதனால் மக்களின் அறிவுத் திறன் குறைந்து விடுமென அஞ்சத்தேவையில்லை. மிகக் குறுகிய நேரத்தில் ஒலிபரப்பு இலகுவில் அதிக விடயங்களை விளக்குவது உண்மை.

எனவே நூலகர்களும் நூலகங்களும் தமது பழைய வழிகளை மாற்றி புதிய பாதையில் வாசகர்களை வழி நடத்தினால் அது மிகவும் பயனுள்ள ஓர் சேவையாக எதிர்காலத்தில் கணிக்கப்பட வாய்ப்புண்டு.

[புதியபாதையில் வாசகர்கள் எப்படி வழி நடத்தப்படலாம் என்பதைப் பிறிதொரு கட்டுரையில் பார்ப்போம்.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவசாயக் கல்வியில் பெண்கள் அக்கறை காட்ட வேண்டும்

"பட்டங்கள் ஆள்வதுஞ் சட்டங்கள் செய்வதும் பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்"

இது விழிப்புற்ற – விடுதலை பெற்ற புதுமைப் பெண்ணின் குரல். எழுச்சி பெற்ற பெண் விடுதலைப் போராட்டத்திலே வெற்றி பெற்றுக் கும்மியடிப்பதாக 20 ஆம் நூற்றூண்டின் ஆரம்ப காலத்தில் இவ்வாறு பாடினூர் பாரதியார். பாரதியின் கனவுகள் இன்று நனவாகி வருவதை நாம் கண்ணூரக் காண்கிறேம்.

பெண்கள் ஏட்டையும் கையால் தொடுவது தீமை என்று எண்ணிய ஒரு சமூகத்திலே பெண்களுக்கு உயர்கல்வி வாய்ப்புகளும் உத்தியோகமும் கிடைப்பது குதிரைக் கொம்பாகவே இருந்து வந்தது. எனினும் மேனூட்டு கல்வி முறை இங்கு நிலை பெற்றதாலும், விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் என்ற இலட்சியம் பரவியதாலும், பெண்களும் ஆண்களைப் போல உயர் கல்வி கற்று உத்தியோகம் பார்க்கும் வாய்ப்பையும், ஏன் இன்று விண்வெளிக்குச் செல்லவும், அரச பதவிகளிலும் இருக்கக் கூடிய வாய்ப்பையும் பெற்றனர்.

## மண்ணை மலரப் பணிபுரிதல் மட்டற்ற இன்பம்

இக்கால மக்கட் சமுதாயத்தின் தேவைக்கேற்பக் கல்வித்துறையை விரிவுபடுத்தி விஞ்ஞானக் கல்வி, விவசாயக்கல்வி, சட்டக்கல்வி. தொழிற் கல்வி எனப்பல பிரிவுகளை வகுத்துத் தந்துள்ளனர் கல்வி இயலாளர்கள்.

ஆடவர் வெளியிலும், பெண்கள் அகத்திலும் அருந் தொண்டாற்றுவர் என்பது நம்முடைய பொதுவான கொள்கை. ஆனூல் அது முற்றிலும் உண்மையன்று. பெண்கள் உலகிற்கியற்றுஞ் செயலும் அவர் இல்லத்தமர்ந்து இயற்றும் பணியின் விரிவேயாகும். இல்லத்திலே கூடியளவு நேரத்தைப் பயன்படுத்துபவள் பெண்ணேயாவாள்.

இன்று பெண்களும் படிக்கத்தலைப்பட்டதனூல் பாடசாலைகளிலும் விவசாயத்தைக் கற்பிப்பது ஒருவகையிலே சிறந்தது எனக் கூறலாம்.

வீடுகளில் கூடியளவு நேரத்தைச் செலவிடுபவர்கள் பெண்கள். ஆனூல் இன்று ஆண்களிலும் அவ்வாறு இருக்கிறூர்கள். எனவே எல்லோருக்கும் விவசாயக் கல்வி அவசியம் தேவை.

**இ. சுலோசனு**

போதியளவு அறிவைப் பெற, வல்லமையைப் பெற, கொண்ட எண்ணங்களை மாற்றி நிரம்பிய சந்தோஷமான வாழ்க்கையைப் பெற இது உதவும்.

பிரயோசனமான வேலை அனுபவத்தைப் பெறவும், பொறுப்புணர்ச்சியைப் பெறவும், தலைமைத்துவ வல்லமை வளர்ச்சியினூல் நல்ல குணங்களை வளர்க்கவும், ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தை அறிவதற்கும் இது மேலும் துணை புரிகிறது.

இவ்வறிவினைப் பாடசாலையில் மட்டுமன்றி, வானொலியில் ஒலிபரப்பாகும் விவசாய நிகழ்ச்சிகளைக் கேட்டும் கமத்தொழில் சம்பந்தமான சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள் போன்றவற்றை வாசித்தும் வீட்டுத் தோட்டத்திலே ஆர்வங்காட்டியும் பெற முடியும்.

பெண்கள் பூமியைப் பார்த்து நடக்க வேண்டுமென தமிழர் வகுத்தது. பெண்களின் வருங்காலத்தையும், மகிழ்ச்சியையும் வருமானத்தையும் கொடுப்பவள் பூமி என்பதை நினைவூட்டத் தானே?

எனவே பெண்களும் சளையாது ஏர் பிடித்து உணவைப் பெருக்க வழி வகுக்கும் விவசாய அறிவைப் பெருக்குவோம்.




# சாரணர் இயக்கத் தந்தை பேடன் பவல் பிறந்த தினம்

## இன்று உலகெங்கும் நினைவு கூரப்படுகிறது

இன்று பேடன் பவெல் தினமாகும். காரணம் அவர் அவர் பிறந்து இன்றுவரை 129 ஆண்டுகள் ஆகின்றன. இவர் இங்கிலாந்து தேசத்தில் 1857 ஆம் ஆண்டு மாசி மாதம் 22 ஆம் திகதி பிறந்தார். இவர் பிறந்து மூன்று வருடங்களில் இவருடைய தந்தை இஸ்ரீவின்சன் சிமித் காலமானூர். அதனூல் அவர் தாயாரே அவரைப் பொறுப்புடன் வளர்த்தார். சிறுவயதில் இவர் படிப்பில் கூடிய அக்கறை காட்டவில்லை. மாறுக பறவைகள், மிருகங்கள் ஆகியவற்றின் ஒலிகளைக் கவனித்து அவற்றை இனம் கண்டு கொள்வதில் அதிக அக்கறை செலுத்தினூர்.

இளவயதிலேயே இராணுவத்தில் சேர்ந்தார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றில் சிறந்து விளங்கினூர். தனது ஊக்கத்தினூலும் உற்சாகத்தினூலும் பல பதவிகளைப் பெற்றுக் கொண்டார்.

1887 ஆம் ஆண்டு ஆபிரிக்காவில் நடைபெற்ற யுத்தத்தில் லூஜி, அஸ்திரி, பிலேஜ்டொஜின் ஆகிய இனத்தவர்களுக்கு எதிராக கடும் யுத்தங்களை நடத்தினூர். அதனூல் ஆபிரிக்க சுதேசியரிடம் பெரும் மதிப்பைப் பெற்றுக் கொண்டார் இவர் 1899 இல் கேர்ணல் பதவியைப் பெற்றூர்.

பின்னர் 1901 ஆம் ஆண்டு பெருமிதத்துடன் ஆபிரிக்காவிலிருந்து தாய்நாடு [இங்கிலாந்து] திரும்பினூர். இவர் தனது யுத்த கால அனுபவங்களைப் பற்றிப் பல நூல்களை எழுதி வெளியிட்டார். இந்த நூல்கள் மக்களிடத்தில் மிகவும் பிரசித்தி பெற்றன பேடன்பவெல் தனது யுத்த காலத்தை மையமாக வைத்து ஓர் இயக்கத்தை ஆரம்பித்தார். அதுதான் சாரணர் இயக்கமாகும். அந்த இயக்கத்தை இங்கிலாந்துக் கால்வாயிலுள்ள பிறன்தன் தீவில் 20 சாரணர்களுடன் ஆரம்பித்தார். இவர் சாரணியம் என்ற தலைப்பில் 6 நூல்களை எழுதி வெளியிட்டார்.

1920 ஆம் ஆண்டில் சர்வதேச சாரணர்களை லண்டன் நகரில் கூட்டினூர். அந்த மாநாட்டின் முடிவில் பேடன் பவெல் உலகபிரதமசாரணராகப் பிரகடனம் செய்யப்பட்டார். இன்று 200க்கும் அதிகமான நாடுகளில் சாரணர் இயக்கம் இயங்கி வருகிறது. இன்று உலகத்தில் 1.5 கோடி சாரணர்கள் இந்த இயக்கத்தில் உள்ளனர்.

சாரணியத் தந்தை கில்வெல் பேடன் பவெல் அவர்கள் 1941ம் ஆண்டு ஆவணி முதலாம் திகதி இவ்வுலகத்தை விட்டுப் பிரிந்தார். அவர் பிறந்த நாளான இன்று உலகெங்குமுள்ள சாரணர்கள் அவரை நினைவு படுத்திக் கொள்கிறூர்கள்.

வாழ்க பேடன் பவெல், வளர்க சாரணர் இயக்கம்.

**பொ. அன்ரன் ஜெறுட்**
பளை மகாவித்தியாலயம் பளை.




## பொது அறிவுப் பொக்கிஷம்

### உங்களுக்குத் தெரியுமா?

1. உலகில் முதலில் 'டெலிபோன்' கருவியைக் கண்டுபிடித்தவர் யார்?
2. உலகிலே பெரிய மணிக்கூடு உள்ள நாடு எது?
3. உலகில் முதலாவது பெண் ஜனூதிபதி யார்?
4. குதிரையிலும் மிக வேகமாய் ஓடக் கூடிய பறவை எது?
5. இரவும் பகலும் சூரியன் தெரியும் நாடு எது?
6. அணில் இல்லாத நாடுகள் எவை?
7. தாடி வளர்ப்பதற்கு வரி விதித்த அரசி யார்?
8. ஆயிரம் ஏரிகள் உள்ள நாடு எது?
9. முதற் தொடங்கிய எழுத்து இறுதியில் முடியும் ஒரு உள்ளூர் இடம் எது?

விடை

1. அலெக்சாண்டர் கிரகம் பெல்
2. கனடா.
3. திருமதி. செனூரா மதியா ஸ்டெல்லா பெரேன்.
4. தீப்பறவைகள்.
5. பின்லாந்து.
6. அவுஸ்திரேலியா, மடகாஸ்கர் தீவு.
7. முதலாவது எலிசபெத் மகாராணி.
8. பின்லாந்து.
9. மகரகம.

தொகுப்பு:
நாகமணி மகேந்திரலிங்கம்.
சங்கானை.

### கண்டுபிடித்தவை

1. தூரதிருஷ்டிக் கண்ணூடி.
2. கம்பியில்லாத் தந்தி
3. தொலைபேசி.
4. டைனமோ.
5. டைனமெற்.
6. மின்குமிழ்.
7. தொலைக்காட்சி.
8. துவிச்சக்கரவண்டி.
9. சீமெந்து.
10. தட்டச்சு யந்திரம்.

### கண்டுபிடித்தவர்

1. கலிலியோ.
2. மார்க்கோனி.
3. அலெக்சாண்டர் பெல்.
4. மைக்கேல் பரடே.
5. அல்பிரட் நோபெல்
6. லாங்முயூர்.
7. ஜான் லோஜி பெயர்ட்.
8. கேர்க்பற்றிக் மக்மில்லன்.
9. ஜோன் சிமிற்றன்.
10. ஷோல்ஸ்.

**இ. உமாராணி**

## சுவைத்துப் பாருங்கள்

### மசாலா பயறில் சிற்றுண்டிகள் (செவன்-இன்-ஒன்)

மிகவும் சத்துள்ளதாகக் கருதப்படும் முழுப் பயறில் நூதனமாகவும் ருசியுள்ளதாகவும் ஒரே சமயத்தில் ஏழு வகைகள் செய்யக் கூடியவை இவை. செய்வதற்கு சிரமமாகத் தெரிந்தாலும், நல்ல ருசியுடன் கூடிய பல சிற்றுண்டிகளை ஒரே சமயத்தில் செய்யலாம். அல்லது பூர்ணத்தை தயார் செய்து வைத்து, ஒரு பொலிதீன் பையில் போட்டு குளிர்சாதனப் பெட்டியில் வைத்து முதல் நாள் சில வகைகள், மறு நாள் சில வகைகள் என்றும் செய்யலாம்.

அல்லது ஏதாவது ஒரு வகையை ஒரே நாளில் செய்து கொள்ளலாம்.

முதலில் பூர்ணம் தயார் செய்ய வேண்டும்.

**வேண்டிய சாமான்கள்:**

1 கப்-பச்சை பயறு (பாசிப்பயறு)
4 டேபிள்ஸ்பூன் - தேங்காய் துருவல்
2 பெரிய வெங்காயம். 2 தக்காளி
5, 6 பல் பூண்டு.
2, 3 பச்சை அல்லது வற்றல் மிளகாய்
1 சிறிய லவங்கப் - பட்டை, அரை டிஸ்பூன் கசகசா.
2 கிராம்பு, 4 மிளகு, 1 பெரிய ஏலக்காய்
2 அச்சு வெல்லம், 1 டீஸ்பூன் சாம்பார்பொடி
கால் டீஸ்பூன்-மஞ்சள், பொடி உப்பு ருசிக்கேற்றபடி.

பாசிப்பயறை முதல் நாளே தண்ணீரில் ஊறப் போட்டு, இரவு தண்ணீரை வடித்து முளைகட்டி வைக்கவும். பிரஷர் குக்கரில் வைத்து அதிகம் தண்ணீர் சேர்க்காமல் கொஞ்சமாகத் தெளித்து வேக வைத்து எடுக்கவும். வெங்காயம், தக்காளி, பச்சை மிளகாய், பூண்டு இவற்றைத் தேங்காயுடன் சேர்த்து அரைத்து விழுதாக்கவும். கொடுத்துள்ள காரம் மசாலா சாமான்களையும் பொடி செய்து, வெந்த பச்சைப்பயறிலிருந்து தண்ணீரை வடிகட்டி மசாலாவுடன் சேர்த்து அரைத்து விழுதாக்கவும். சட்டியில் எண்ணெய் ஊற்றி சாம்பார் பொடியை போட்டு, வெங்காயம், பூண்டு விழுதைப் போட்டு வதக்கவும். பின் மசாலா பச்சைப் பயறு விழுதையும் சேர்த்து உப்பு, வெல்லம் இவற்றைச் சேர்த்து சுருள வதக்கவும். பின் சிறு உருண்டைகளாகச் செய்து வைத்துக் கொள்ளவும்.

இனி இந்தக் கலவையில் ஏழுவித தின்பண்டங்களைச் செய்யலாம். இதில் வெல்லம் சேர்க்காமலும் வெறும் கார தின்பண்டமாகவே செய்யலாம்.

நன்றி: மங்கை

## அம்புலிப் பாட்டு

அம்புலி அம்புலி வா வா வா
அழகாய் இங்கே வா வா வா
மறைந்து மறைந்து போகின்றூய் - பின்
வளர்ந்து வளர்ந்து வருகின்றூய்.
—அம்புலி

வானத்தின் மீது வனப்புடனே
வளைய வளைய வருகின்றூய்
கானத்தின் மீதும் உன் நிலவை
காய ஏனே விடுகின்றூய்.
—அம்புலி

தண்ணீர் மேலே உன் நிழலை
தனியாய்க் கண்டே உளமகிழ்ந்தேன்
கண்ணீர் விடும் தம்பியர்க்கு
தண்ணிலவாய் ஒளிரும் வெண்ணிலவே.
—அம்புலி

அழுத தம்பி உனைக் கண்டே
அழுகை தன்னை நிறுத்திவிட்டான்
தொழுதோம் உன்னை நாம் எமக்கு
தூய வாழ்வை அருள்வாயே.
—அம்புலி

- ஸ்ரீதர் சத்தியபாமா -

## நீண்ட காலம் உயிர் வாழ்ந்தவர்

உலகில் ஆகக் கூடிய காலம் உயிர் வாழ்ந்தவர் ஒரு ஜப்பானியர். 120 வருடங்கள் உயிர் வாழ்ந்தவர் சிகேசியே இசூமி என்பது அவர் பெயர்.

அவரது பொழுதுபோக்கு ரீ. வி. பார்த்தல். எதைப்பற்றியும் கவலைப்படாமையும் அனைத்தையும் இறைவனிடத்து விடுவதும் தனது நீண்ட உயிர் வாழ்க்கையின் இரகசியம் என்பார்.

பிரித்தானியாவில் 4 ஆயிரம் பேர் நூற்றூண்டு உயிர் வாழ்ந்தவர்கள். இவர்களுள் 22 வீதமானேர் ஆண்கள்.

இது நிரூபிக்கப்பட்ட புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்டு வெளியிடப்பட்ட தகவலாகும்.

# பஞ்சாமிர்தம் பலாசுஅமிர்தம்

## எறும்பு எண்ணிக்கை

உலகில் உள்ள மிருகங்களின் எண்ணிக்கையில் 5இல் 4 பங்கு எறும்புகள் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

## நீதியைக் கையில் எடுத்து விளையாடிய நீதிபதி

நீதியை நிலை நிறுத்துபவன் நீதிபதி.

ஆனூல் நீதியைத் தமது சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டு நீதிமன்றங்களில் கொடுங்கோல் தர்பார் புரிந்த நீதிபதி (?) களும் இருக்கத்தான் செய்கிறூர்கள்.

இந்த வகையில் காட்டுமிராண்டி நீதிபதி என்று வர்ணிக்கப்பட்டவர் பெனடிக்ட் கார்ப்ஸோ.

மனேவியாதி போன்ற ஒரு நோயினூல் பீடிக்கப்பட்ட இவர் நீதிமன்றங்களில் புரிந்த அட்டகாசம் பலப் பல.

பொதுமக்களைத் தூக்கில் ஏற்றுவதில் அவர் படைத்த சாதனை திடுக்கிட வைக்கிறது.

இவர் 1620 ஆம் ஆண்டு முதல் 1666 ஆம் ஆண்டு வரை [illegible] விக் நீதிமன்ற தலைமை நீதிபதியாக இருந்தவர்.

இந்தக் காலத்தில் அவர் விதித்த மரண தண்டனைகளின் எண்ணிக்கை மாத்திரம் 30 ஆயிரத்துக்கும் அதிகம் என்றூல் பாருங்களேன்.

இவற்றில் அனேகமானவை சூனிய வேலைகளுக்கும் திருட்டுக்குமே விதிக்கப்பட்டன.

இவற்றில் சுமார் 20 ஆயிரம் மரணதண்டனைகள் சூனிய வேலைகளில் ஈடுபட்ட பெண்களுக்கே விதிக்கப்பட்டதாம்.

மரண தண்டனை விதிப்பதுடன் மட்டும் அவர் நின்று விடுவதில்லை. விதிக்கப்பட்ட மரணதண்டனை நிறைவேற்றப்படுகின்றதா என்பதைத் தாமே நேரில் பிரசன்னமாகி உறுதியும் செய்து கொள்ளுவாராம். அப்போது தான் அவருக்குத் திருப்தி.

ஒரு நீதிமன்றத் தினத்தில் சராசரி ஐந்துபேரின் உயிருக்கு உலை வைத்த இந்த நீதிபதி தம்மை ஒரு சிறந்த மத போதகர் என்று அடிக்கடி கூறிக் கொள்ளுவாராம்.

தனது வாழ்க்கைக் காலத்தில் ஐம்பது தடவைகள் பைபிளை முழுதாக வாசித்து முடித்ததாகவும் இவர் பீற்றிக் கொள்வார்.

பல்லாயிரக் கணக்கான மனிதர் உயிருக்கு வேட்டு வைத்த இந்த நீதிபதியை சாவு எப்படி அணைத்தது தெரியுமா?

தனது ஆசை வளர்ப்பு நாய் திடீரென இறந்த செய்தியை அவரால் தாங்க முடியவில்லை. இருதயம் பிளந்து செத்தாராம் அந்த 'உத்தம' நீதிபதி.

## விசித்திரமான சாதனைகள்

"கொட்டாவி, நெட்டை,குறட்டை விட்டாரே கெட்டார்!"

இது ஆன்றோர் அனுபவ மொழி.

இவற்றில் கூட சாதனைகளும் நிகழ்த்தப்பட்டுள்ளன.

### குறட்டை

கென்ட் நகரைச் சேர்ந்த மெல்வின் சுவிற்ஸர் ஒரு நாள் குறட்டை விடத் தொடங்கினூர்.

ஒரு அடி தூரத்தில் இருந்து மீட்டர் மூலம் குறட்டைச் சத்தம் அளக்கப்பட்டது. சத்தம் 87.5 டெஸிபெல்ஸ் என அளவிடப்பட்டது.

28. 6. 1984 இல் இச் சாதனை நிகழ்த்தப்பட்டது. இத்தனைக்கும் அவரின் மனைவி ஜூலிக்குக் காது கேட்காது.

### கொட்டாவி

1888 இல் பதினைந்து வயதுச் சிறுமி ஒருத்தி கொட்டாவி விடத் தொடங்கினூர்.

5 வாரங்கள் இடைவிடாது கொட்டாவி, கொட்டாவியாய்விட்டே சாதனையை நிகழ்த்தினூர்.

### இருமல்

அமெரிக்காவைச் சேர்ந்த சார்ள்ஸ் ஓஸ்பொர்ன் 1922 இல் ஒரு நாள் இருமத் தொடங்கினூர். தொடர்ந்து 60 வருடங்கள் இருமியே முடித்துச் செத்தார்.

இதனிடையே அவருக்கு இரண்டு மனைவிகள் வாய்த்தனர். 8குழந்தைகளுக்கும் தந்தையானூர்.

ஆனூல் இருமலுக்கு மருந்து கண்டுபிடிக்க முடியாமல் இறந்தார்.

### தும்முதல்

டொனூ கிரிபித்ஸ், 13. 1. 81 இல் தும்மத் தொடங்கினூர். 16. 9. 83 வரை தொடர்ந்து தும்மி முடித்தார்.

978 நாட்கள் தொடர்ந்து தும்மிய இவரின் தும்மலின் வேகம் மணித்தியாலத்துக்கு 106 மைல் ஆக இருந்தது என்று கணக்கிடப்பட்டது.

## வாழ்க்கைக்கு ஜோடி தெரிவு செய்ய புதியமுறை

### லண்டன் நிறுவனத்தின் முயற்சி வெற்றி

உணவில் காட்டும் ஒற்றுமை, வாழ்விலும் இணைய வழி செய்கிறது.

இங்கல்ல. லண்டனில். இளைஞர், யுவதிகளுக்கு திருமணங்களை ஒழுங்கு செய்து வைக்கும் நிலையங்கள் லண்டனில் நிறைய உண்டு.

பெரும்பாலானவை கம்பியூட்டர் சாதனங்கள் மூலம் கணவனைத் தேடும் பெண்களுக்கும் மனைவியைத் தேடும் ஆண்களுக்கும் திருமணங்களை ஒழுங்கு செய்து வைக்கின்றன.

எல்லா திருமணங்களிலும் பார்க்க, ஒரு நிறுவனம் ஒழுங்கு செய்து வைக்கும் திருமணங்கள் நீண்ட காலம் நிலைத்து நிற்பதாக லண்டன் பத்திரிகையாளர்கள் அண்மையில் கண்டுபிடித்துள்ளனர்.

அந்தத் திருமண நிறுவனம், கம்பியூட்டர் சாதனம் வைத்து சேவை செய்யவில்லை.

உளதத்துவவியலாளர் ஒருவரையே அந்த நிறுவனம் சேவைக்கு வைத்திருக்கின்றது.

அந்த உளவியல் நிபுணர் என்ன செய்கின்றூர்? எப்படி ஜோடிப் பொருத்தம் பார்க்கிறூர்?

தன்னிடம் வரும் வாடிக்கையாளரான ஆணையும் பெண்ணையும் அருகில் உள்ள உணவு விடுதிக்கு அனுப்புவார். அங்குள உணவு வகைகள் பற்றிய அட்டவணை (மெனு) யைப் பார்த்து தமக்கு விருப்பமான உணவு வகைகளை வந்து கூறும்படி சொல்லுவார்.

இருவரும் குறைந்தது ஒரே மனதுடன் 5 உணவு வகைகளைக் கூறி விட்டால் போதும். அவர்கள் இருவரையும் வாழ்க்கையில் இணைத்து விடுவார், அந்த உளவியல் நிபுணர்.

எப்படி இருக்கிறது, திருமணப் பொருத்தம் பார்ப்பது?

— எஸ்ஜி —

### பதிப்புரிமைக்கு ஒரு கோடி

இதுவரை வெளிவந்த நூல்களில் உலகத்திலேயே அதிக பணம் கொடுத்து வாங்கப்பட்ட நூல் எது தெரியுமா?

ரஷ்ய அதிபராக இருந்த ஸ்டாலினைப் பற்றி அவருடைய மகள் எழுதிய புத்தகம்தான் அது அதற்கு 1 கோடியே 12லட்சம் ரூபா பதிப்புரிமை கொடுத்து அமெரிக்க நிறுவனமான கோஸக்ஸ் வாங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள்
# காலத்தால் மூத்த கற்றளிகள்

**இந்து நாகரிகம்**
க. பொ. த ப.
[ உயர்தரம் ]

**கோயிலின் பெயர்கள்**

சாஸ்திர நூல்களில் கோயில்களைக் குறிப்பிட உபயோகப்படுத்தப்பட்டிருக்கும் இரு முக்கிய பெயர்கள் 'விமானம்', 'பிராசாதம்' ஆகும். விமானம் என்பது சாஸ்திர விதிப்படி கட்டப்பட்ட கோயிலின் பெயர். விமானம் கடவுளின் இரதம் போல இருக்கும். பிராசாதம் கடவுளின் இருப்பிடம் என்ற பொருளைத் தரும். பிராசாதங்கள் தமது வனப்பின் மூலம் தெய்வங்களையும் மனிதர்களையும் களிப்படையச் செய்கின்றன என்று 'சில்பரத்தினம்' என்ற சிற்ப நூல் கூறும்.

ஹெலியோடோரஸ் கருடத் துவஜக் கல்வெட்டு (கி. மு. 2 ஆம் நூ. ஆ) 'விஷ்ணுவின் உத்தம பிராசாதம்' என்றும் பார்ஹூத் கல்வெட்டு (கி. மு. 1 ஆம் நூ. ஆ.) 'வையந்த பிராசாதம்' என்றும் யசோவர்மதேவன் காலத்து (சுமார் கி பி. 530) 'நாளாந்த' கல்வெட்டு 'பிராசாத தேவாலயம்' என்றும் குறிப்பிடுவதைக் கொண்டு கோயில்கள் பிராசாதம் என்ற சொல்லாற் குறிக்கப்படுவது புலனாகின்றது. 'தேவகிருகம்', 'தேவாயத்னம்'. 'தேவாலயம்', 'தேவகுலம்', 'மந்திரம்' முதலிய சொற்களும் கோயிலைக் குறிப்பன.

**கட்டடப் பொருள்கள்**

கோயில்களைக் கட்டுவதற்கு மரம், செங்கல், கருங்கல் ஆகியவற்றை

## கல்லிலே கலைவண்ணம் கனிந்தொளிரும் அற்புத சிலை வடிவங்களின் அருள் மாடங்கள்

உபயோகப்படுத்தலாம் எனச் சாஸ்திர நூல்கள் கூறுகின்றன. இந்தியாவில் உள்ள பெரும்பாலான கோயில்களில் கருங்கல்தான் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. கோயில்களைக் கட்டுவதற்கான மேற்கூறிய அடிப்படைப் பொருள்களுடன் சுண்ணும்புச் சாந்து, வண்ணப் பொடிகள் முதலிய பொருள்களும் பயன்படுவன. சுண்ணும்புச் சாந்து கற்களை இணைக்கும் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. மேற்பூச்சாகவும் பயன்படும். வண்ணப் பொருள்கள் சுண்ணும்புப் பூச்சு மீது ஓவியம் தீட்டத் தேவைப்படும். கோயில்களில் பூச்சுக்குப் பயன்படும் சாந்து விசேடமாகத் தயாரிக்கப்படும். இதற்கு 'வஜ்ர லேபம்' என்று பெயர். பல்வேறு விதமாகச் சாந்தினைத் தயாரிக்கும் முறை சிற்பசாத்திரங்களிற் கூறப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் இன்று நிலைபெற்றிருக்கும் காலத்தால் முற்பட்ட கோயில்கள் பல்லவர் காலத்தில் பல்லவ அரசர்களாற் கட்டப்பட்டவை. காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில், மகாபலிபுரக் கோயில் என்பன குறிப்பிடத்தக்கன.

சோழர் காலத்தில் பிரமாண்டமான கோயில்கள் எழுந்தன. கருங்கற்களாற் கோயில்கள் கட்டப்பெற்றன. கர்ப்பக்கிருக மாடங்களில் அழகிய சிற்பங்கள் இடம் பெற்றன. பிரமாண்டமான கோயில் முதலாம் இராசராசன் [கி. பி. 9?5 — 1014] காலத்தில் கட்டப்பெற்றது. பிருகதீஸ்வரம் (பெரிய கோயில்) என்றும் இதனைக் கட்டிய மாமன்னன் பெயரால் இராசராசேஸ்வரம் என்றும் இக் கோயில் பொருத்தமாக அழைக்கப்படும்.

ஆலய நிர்மாணக் கலை மரபில் சிற்பம், ஓவியம் இதர இணைந்த கலையம்சங்களுள் சிறந்த அனைத்தும் பூரணமாகச் சேர்ந்

சென்றவார சஞ்சீவியில் ஆலய வழிபாட்டு அடிப்படையில் ஓங்கிச் சிறந்த கட்டடக் கலை என்ற தலைப்பில் வெளியான கட்டுரையின் தொடர்ச்சி இது. இக்கட்டுரையை எழுதியவர்;

**கலாநிதி. ப. கோபாலகிருஷ்ணன்**
விரிவுரையாளர், இந்து நாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

சென்ற வாரக் கட்டுரையில் கட்டுரையாளரின் பெயருக்குப் பதிலாக பிறிதொருவரின் பெயர் தவறுதலாகப் பிரசுரிக்கப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேம்.

தமைந்த கோயில் இது. தென்னிந்தியாவிலேயே பெரிதான விமானத்தைக் கொண்டது இது. அந்தராளம், பெரிய மகாமண்டபம் கொண்டது. பெரிய நந்தி உள்ளது. இரண்டடுக்கு வெளிச் சுவருடன் கூடிய விமானம் சாந்தார நிரந்தார வகைகளுள் சாந்தார வகையைச் சேர்ந்தது. பீடத்துடன் கூடிய மாபெரும் லிங்கம் அமைந்த கர்ப்பக்கிருகம் உண்டு. கர்ப்பக்கிருகத்தின் வெளிச் சுவரில் நான்குபுறமும் வாயில்கள் உள்ளன. மாடங்களிலும் அமைந்துள்ள பெரிய சிற்பங்கள் கண்ணைக் கவர்வன.

சிவனதுபல்வேறு மூர்த்தங்கள் இங்கு இடம் பெற்றுள்ளன. ஆள் உயரச் சிற்பங்கள், பெரிய விமானம், உச்சியில் மிகப் பெரிய, ஒரே கல்லாலான எண் கோண வடிவச் சிகரம் என்பன உள்ளன. உட்பிரகாரச் சுவரில் இருபுறமும் இரு வரிசைகளில் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. பிரகாரத்தின் மேல் அடுக்கில் சுவர்ப்பகுதியில் எண்பத்தாறுக்கு மேற்பட்ட சிற்பங்கள் உள்ளன. பரத முனிவரின் நாட்டிய சாத்திரத்திற் கூறப்பட்டுள்ள நூற்றெட்டுக் கரணங்களில் எண்பதுக்கு மேற்பட்டவற்றைச் சிவன் அபிநயத்துக் காட்டுவதாக அமைந்த சிற்பங்கள் இவை. உயரக் குறைவான கோபுரம் உண்டு. பிரகாரத்தின் மூன்றுபுறமும் மூன்று தோரண வாயில்கள் உள்ளன. கோயிலைச் சுற்றி வேறு சிறு கோயில்களும் உள்ளன. பிள்ளையார், சுப்பிரமணியர்க்கு உரியவை பிற்காலத்தைச் சேர்ந்தன. இங்குள்ள அலங்கார வெண்கலச் சிலைகளுள் ஆனந்த நடராசர் சிலை குறிப்பிடத்தக்கது.

இந்தியக் கட்டடக் கலையின் இணையற்ற சாதனை இக் கோயில். பின் வந்த சோழர் வேறு பல கோயில்களையும் எழுப்பினர்.

கோயில்களுக்குப் பல உறுப்புக்கள் உள்ளன. மூல விக்கிரகத்தின் கட்டடம் (கர்ப்பக்கிருகம்) விமானம், இதன் கூரையாகிய சிகரம் அல்லது ஸ்தூபி என்பன குறிப்பிடத்தக்கன. ஸ்தூபியின்கீழ் கருவறை ஆகிய கர்ப்பக்கிருகம் அமையும். இங்கு கோயிலுக்குரிய மூலமூர்த்தி நிறுவப்பட்டிருக்கும். இதன் வாயில் கிழக்கு நோக்கியதாக அமையும். வாயிலுக்கு முன்னிருப்பது மண்டபம். அடுத்து இடம்பெறுவது அர்த்தமண்டபம். பல அறைகள் வரிசையாக நாற்புறமும் நாளடைவில் இடம் பெற்றன. கருவறையைச் சுற்றிக் கோயிலை வலம்வரப் பயன்படும் வழி பிரகாரம் எனப்படும். அங்கு சிறு கோயில்கள் பரிவாரதெய்வங்களுக்கு ஏற்பட்டன. இவை பஞ்சர கோஷ்டங்கள் எனப்படும். இவற்றின் கூடுகளில் விக்கிரகம் இடம் பெறும்.




# சுண்ணக் கற்பாறை அகழ்வுகள்

**திட்டமிடாத வகையில் சுண்ணும்புக் கற்பாறையை வெட்டி எடுத்தல்: பயிர்ச் செய்கைக்கேற்ற பாகங்களில் மேலரும்பிக் காணப்படுகின்ற சுண்ணும்புக்கற்பாறைகளை வெட்டி அகற்றுதல்:**

மேலே காட்டப்பட்டுள்ள பலாபலன்களைப் பெறுவதற்காக இன்று யாழ்ப்பாணக் குடாநாட்டில் திட்டமிடாத வகையிலும் பரவலாகவும் சுண்ணும்புக் கற்பாறைகள் வெட்டி எடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைச் சுற்றுடலில் சீமெந்து உற்பத்திக்காகவும் பலாலிப் பகுதியிலிருந்து மயிலிட்டி மீன்பிடித் துறைமுக விருத்திக்காகவும் கீரிமலைப் பகுதியிலிருந்து காங்கேசன் துறைமுக விருத்திக்காகவும் ஏனைய பல பகுதிகளில் தரைக்கு மேல் வெளியரும்பிக் காணப்படுகின்ற பாறைகளை வெட்டி அகற்றி பயிர்ச் செய்கை நிலங்களாகவும் மாற்றப் பட்டு வருகின்றன. இவ்வாறு அகற்றப்படும் கற்பாறைகளே பெருமளவுக்கு வீடுகள், கட்டடங்கள் கட்டுவதற்கும் தெருக்களை அமைப்பதற்கும் பயன்படுத்தப் படுகின்றன.

ஆனல் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக் கன்றி, ஏனைய தேவைகளுக்கு வெட்டி எடுக்கப்படும் பொழுது திட்டமிடப் படாத வகையிலும், பாரதூரமான பக்க விளைவுகள் ஏற்படும் வகையிலும் வெட்டியெடுக்கப் பட்டு வருகின்றன. பயிர்ச் செய்கை நிலங்களில் வெளியரும்பிக் காணப்படும் சுண்ணும்புக் கற்பாறைகள் ஏறத்தாழ 2 அடி ஆழம் வரையே வெட்டியெடுக்கப் பட்டு, செம்மண் நிரப்பப்பட்டுப் பயிர் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. இத்தகைய பாகங்களில் சுண்ணும்புக் கற்பாறை அகற்றப்பட்டாலும், நிலம் ஓரளவுக்குப் பதிக்கப்பட்டு நீர் தாங்கும் வடிநிலத்தோற்றத்தினைப் பெறுவதனுல், நிலநீர் தாங்குப் படுக்கையில் மீள் நிரம்பலுக்கு இப்பாகங்கள் உதவுகின்றன.

எனவே பயிர்செய்கைக்காகச் சுண்ணும்புக் கற்பாறைகள் அகற்றப்படும் பொழுது பாதிப்பானபக்க விளைவுகள் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை எனலாம். இதுவரை காலமும் சுண்

## பயிர்ச் செய்கைக்காக அகற்றுதல் பாதிப்புகளை ஏற்படுத்தாது

ணும்புக்கல் வெளியரும்பிக்காணப்பட்ட பாகங்களிலிருந்து ஏறத்தாள 14 45 மில்லியன் தொன் நிறையுள்ள சுண்ணும்புக் கற்கள் அகற்றப்பட்டுள்

★ த. குணசேகரம் ★
[ நீரியல், புவிச்சரிதவியலாளர் ]

ளதாக மதிப்பிடக் கூடியதாய் இருக்கின்றது. மேலும் இவ்விடங்களில் தோண்டப்பட்டுள்ள கிணறுகளிலிருந்து அகற்றப்பட்டுள்ள சுண்ணும்புக்கல் 0 9மில்லியன் தொன்களாக இருக்கக் கூடுமென்று மதிப்பிடக் கூடிய தாயிருக்கின்றது. ஆகவே முழுமையாக இதுவரை காலமும் இத்தகைய செயலின் மூலம் ஏறத்தாள 15. 35 மில்லியன் தொன் சுண்ணும்புக் கல் அகற்றப்பட்டு இவையாவும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பெருந்தெருக்கள், ஏனைய போக்குவரத்துப் பாதைகள், வீடுகள், கட்டடங்கள் என்பனவற்றுக்கும் பயன்படுத்தப் பட்டுள்ளன.

இத்தகைய பயன்பாடு கடந்த 20வருட காலங்களில் மிகையாக நடைபெற்றுள்ளதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும். எனவே வருடாந்தம் சராசரி 0. 75 மில்லியன் தொன் இத்தகைய தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றதென்பதை மதிப்பிடக் கூடியதாயிருக்கிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இதுவரையில் பயன்படுத்தப்படாது வெளியரும்பிக் காணப்படுகின்ற சுண்ணும்புக் கல் பாகங்களிலிருந்து வெட்டி எடுக்கக் கூடிய கல்லின்அளவு ஏறத்தாள 30 மில்லியன் தொன் என்றும் மதிப்பிடக்கூடியதாயுள்ளது. இப்பொழுது இத்தகைய பாகங்களில் சுண்ணும்புக்கல் வெட்டி எடுக்கப்பட்டு வருகின்ற வேகத்துடன் கணக்கிடும் பொழுது இன்னும் வெட்டி எடுக்கப்படாத பகுதியிலுள்ள உள்ளார்ந்த சுண்ணும்புக் கல்லின் அளவு, இன்னும் 25 வருடங்களுக்கு மட்டுமே மேற்குறித்த தேவைகளுக்குப் பயன்படுத்த முடியுமென மதிப்பிடலாம்.

**சீமெந்து உற்பத்திக்காக சுண்ணும்புக் கல் வெட்டி எடுக்கப் படுவதும் அதனுல் ஏற்படும் பக்க விளைவுகளும்:**

காங்கேசன்துறையில் அமைக்கப்பட்ட சீமெந்துத் தொழிற்சாலையில் சீமெந்து உற்பத்தி 1950ஆம் ஆண்டுக் காலத்தில் ஆரம்பிக்கப் பட்டது. இதற்கான மூலப் பொருளான சுண்ணும்புக்கல் இத்தொழிற்சாலையைச் சுற்றியுள்ள பாகங்களில் வெட்டி எடுக்கப்பட்டு வருகின்றது. இப்பகுதி கடல் மட்டத்திலிருந்து சராசரியாக 22அடி உயரமுடையதாக இருக்கின்றது. இப்பகுதியில் வைரச் சுண்ணும்புக் கற்பாறை வெளியரும்பிக் காணப்பட்டதனுலும், சீமெந்து உற்பத்திக்கேற்ற தன்மையைக் கொண்டிருந்ததனுலுமே சீமெந்துத் தொழிற்சாலை இங்கு அமைக்கப்பட்டது. எனினும் இப்பகுதி கடற்கரைக்கு அண்மையாக இருப்பதனுல் சுண்ணும்புக்கல் அகற்றப்படும் பொழுது, இதனுலேற்படக்கூடிய பக்க விளைவுகளை நன்முறையில் கருத்திற் கொண்டு அகற்றப்படுவது மிக முக்கியமானதாகும்.

யாழ். குடாநாட்டின் மற்றைய பாகங்களில் சுண்ணும்புக்கல் வெளியரும்பிக் காணப்படுகின்ற பாகங்களோடு ஒப்பிடும் பொழுது, காங்கேசன் துறைச் சீமெந்துத் தொழிற்சாலைப் பகுதி கூடிய உயரமுடைய பாகமாக இருப்பதனுல் இங்கு இத்தொழிற்சாலை அமைக்கப்பட்டமை பொருத்தமானதாகும். எனினும் இங்கு சுண்

## நீர்தாங்கிப்படுக்கைகள் மீளவும் நிரப்பப்பட வாய்ப்புண்டு

ணும்புக் கற்பாறைகள் எந்தளவு ஆழம் வரை வெட்டி எடுக்கப்படலாம் என்பதில் மிகக் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இப்பாகத்தில் அமைந்துள்ள சுண்ணும்புக் கற்பாறைகள் நிலநீரைக் கடலை நோக்கி நீரூற்றுக்களாகப் பெருமளவில் வெளியோற்றக் கூடிய அமைப்பைக் கொண்டிருக்கின்றது. கீரிமலையிலிருந்து காங்கேசன்துறை வரை கரையோரமாகக் காணப்படுகின்ற பல நீரூற்றுக்கள் இதனை வலியுறுத்துகின்றன. யாழ். குடாநாட்டின் பாறை அமைப்பின் பொருத்துக்கள், வெடிப்புக்கள் என்பன கூடுதலாக 40பாகை வட கிழக்காகவும், வட மேற்காகவும் அமைந்து காணப்படுவதனுலுமே நிலநீர் இவ்வகையில் கடலை நோக்கி இப்பாகங்களினூடாக வெளியேறுகின்றது,

இத்தொழிற்சாலை அமைந்துள்ள பகுதியில் நிலநீர் மட்டம் மேற்பரப்பிலிருந்து 19/20 அடி ஆழத்தில் காணப்படுகின்றது. இத்துடன் இப்பகுதியில் சுண்ணும்புக் கற்பாறைப் படுக்கைத் தளம் பல்வேறு காலத்தில் பல்வேறு மட்டங்களில் வெடிப்புகளையும், குகைகளையும் (CAVERNS) கொண்டுள்ளதாக அமைந்திருக்கின்றது இதனுல் இத்தகைய இடங்களில் அதிகளவு ஆழத்தில் சுண்ணும்புக் கற்பாறைகள் வெடி வைத்துத் தகர்க்கப்படும் பொழுது, இவ் வெடிப்புகள் அதிர்ச்சியினுல் மேலும் விரிவடைந்து கடலைநோக்கி வெளியேறுகின்ற நிலநீர் ஓட்டத்தை மேலும் அதிகரிக்கச் செய்கின்றன. இதனுல் குடாநாட்டின் நிலநீர் கொள்ளளவு வெகு விரைவாகக் குறைக்கப்படக் கூடிய சாத்தியக் கூறுகள் தென்பட்டுள்ளன.

இன்றுஇத்தேவைக்காக சுண்ணும்புக் கல் வெட்டி எடுக்கப்படுகின்ற அளவினையும் வேகத்தினையும் மதிப்பிடும் பொழுது சில உண்மைகள் தெளிவாகின்றன. பயிர்ச் செய்கைக்கு சிறந்த செம்மண்ணையும் நன்நீரையும் கொண்டுள்ள இப் பிரதேசத்தின் நீர் அண்மைக் காலங்களில் உவரடைந்து வந்துள்ளமையை ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

இன்றுஏறத்தாழ தரை மட்டத்திலிருந்து 20 /25 அடி ஆழம் வரை சுண்ணும்புக் கல் பாறைகள் வெட்டியெடுக்கப் பட்டுள்ளதை இத் தொழிற்சாலையின் முதலாம் கட்ட சுண்ணும்புக் கல் அகழ்ந்தெடுக்கும் வேலைப் பகுதியில் அவதானிக்கக் கூடியதாயிருக்கின்றது. இதனுல் இப்பகுதியின் நிலநீர் ஆவியாக்கத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. ஆவியாக்கத்திற்கு உட்படுத்தப்படும் பொழுது நிலநீரிலுள்ள உப்புக்கள் (முக்கியமாக குளோரைட் அயன்கள்) ஒருங்கு சேர்ந்து அவ்விடங்களிலேயே படிவதனுல் இப்பாகங்களில் நிலநீர் சவர்த்தன்மையை அடைகின்றது.

நாளாந்தம் அதிகரிக்கும் ஆவியாக்கத்தின் காரணமாக மேலும் நீர் உவரடைவதனுல் இன்று இத்தொழிற்சாலைக்குத் தேவையான குடிநீரையும் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இத் தொழிற்சாலையின் அயற் பாகங்கள் ஒரு காலத்தில் வெற்றிலைச் செய்கையில் சிறந்து விளங்கிய போதிலும் இன்று நிலநீரின் தன்மையில மாற்றங்கள் ஏற்பட்டு வருவதனுல் இப் பயிர்ச் செய்கையில் வீழ்ச்சி ஏற்பட்டு வருகின்றது.



■■■ எரிவாயு தயாரிப்பு ■■■

# சிறந்ததோர் சூழல் தொற்று நீக்கியாகவும் பயன்படுகிறது

(சென்ற வாரத் தொடர்...)

கால்நடைகளின் கழிவுகள் சக்திப் பிறப்பாக்கத்திற்கு மட்டுமன்றிச் சிறந்த பசளையாகவும் பயன்படுத்தப்படுகின்றது. உயிர்வாயு உற்பத்திக்குப் பயன்படுத்திய சாணத்தைத் தோட்டங்களுக்குப் பயன்படுத்தல் சிறந்தது. உயிர்வாயுவைப் பிறப்பித்தற்குப் பயன்படுத்திய சாணமானது நொதிப்பின் போது களைகளை முளைக்க வைக்கும் சக்தியை இழந்துவிடுவதால் தோட்டங்களில் களை வளரும் பிரச்சினையும் தீர்ந்துவிடுகின்றது. எரு முதலான சேதனக் கழிவுகள் உயிர்வாயுப் பிறப்பாக்கத்திற்கு பயன்படுத்தப்படும் இடத்து அவற்றின் வளமாக்கிப் பெறுமதியை இழக்கின்றன என்ற கருத்து தவருனதாகும்.

நொதிப்புக்குட்பட்ட எருக்கூழில் உள்ள நைதரசனனது தாவரங்களால் இலகுவாக உறிஞ்சக்

சி. அம்பிகாவரன்

கூடிய அமோனிய அயன் நிலைக்கு மாற்றப்படுகின்றது. எனவே பயிர்களுக்கான ஓர் சிறந்த பசளையாக நொதிக்கப்பட்ட சாணம் அமைகின்றது என்பதில் ஐயமில்லை.

மேலும், எருவானது சமிபாடாக்கியில் இட்டு [illegible] வரை நொதித்தலுக்குள்ளாவதால் எருவிலுள்ள நோய்க்கிருமிகள் இறந்துவிடுகின்றன. எனவே சுற்றுப்புற மக்கள் தொற்று நோய்க்குள்ளாகும் அபாயமும் இல்லாதொழிகின்றது.

எனவே சுருக்கமாக நோக்கின் உயிர்வாயு உற்பத்தியானது எரிபொருள் பற்றுக்குறை, உரவகை வழங்கல், சுற்றுடல், சுகாதாரம் போன்ற பல்வேறு நோக்கங்கள் கருதியும் பயனுடையதாகவே அமைகின்றது.

இத்தகைய பயன்களைக் கொண்ட உயிர்வாயு உற்பத்தியில் நாமும் ஈடுபடல் மூலம் சிறந்த பலன் கிடைக்கும். எந்த ஒரு குறைவிருத்திப் பிரதேசமும்வர்த்தகரீதியற்றமூல வளங்களிலிருந்து சக்தியைப் பிறப்பாக்க முற்படுகையில், தொழில்நுட்பச் சிக்கலற்ற, மூலதனக் குறைவான உள்ளூரில் விரயமாகும் சாதனங்களைப் பயன்படுத்தல் புத்தி சாதுரியமானது. இவ்வகையிலேயே, எமது பிரதேசத்திலும் உயிர் வாயுத் தயாரிப்பில் எல்லா மக்களும் நம்பிக்கை கொண்டு செயற்படல் மூலம் இங்கு நிலவும் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடியதாக இருக்கும்.

## நமது ஆப்த நண்பர்கள்

தாவரங்கள் நம்முடைய உயிர்த் தோழர்கள். அவை நமக்கு உரமாகின்றன. உணவாகின்றன. எடை அளிக்கின்றன. வீடுகட்ட உதவுகின்றன. தட்டுமுட்டுச் சாமான்கள் செய்யப்பயன்படுகின்றன. நெடுஞ்சாலைகளில் நிழல் தருகின்றன. காற்றின் வேகத்தைக் கட்டுப்படுத்துகின்றன. மண்அரிப்பைத் தடுக்கின்றன. குளிர்ந்த காற்றுத் தருகின்றன. இவற்றிற்கெல்லாம் மேலாக சூரிய ஒளியில் தங்களுக்கு வேண்டிய மாவுப்பொருளைத்தயாரிக்கும் போது காற்றிலுள்ள கரியமிலவாயுவைகரிவேறுபிராணவாயு வேருகப் பிரிக்கின்றன,

இவ்வாறு நம் சுவாசத்திற்கு நல்லவற்றைத் தரும் மரங்களை நாம் வெட்டி நாசம் செய்கிறேம். அதற்குப் பதிலாக ஆண்டுதோறும் மரங்களை நட்டு வளர்ப்போம். பாதுகாத்து பசுமையையும் இயற்கை அழகையும் ரசிப்போம்.

தொகுப்பு:-
க. கனகராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்களின் தோல்வியை அடுத்து

# பிரபுவுக்கு பிறந்தது 'ஞானோதயம்'

கதையில் போதிய கவனம் செலுத்தாமல் படங்களை வரிசையாக ஒப்புக்கொண்டதால், சில படங்கள் தோல்வி அடைந்தன. அது எனது தவறுதான்.

இப்படியான தவறுகள் இனியும் நடக்காமல் பார்த்துக் கொள்வேன் என்கிறார் பிரபு.

தொடர்ச்சியாக அடுத்தடுத்து பிரபுவின் படங்கள் வெளியாகின. அவற்றில் சில படங்கள் தோல்வி கண்டன பிரபுவுக்கு வந்தது "ஞானோதயம்"

ஞானோதயம் பெற்ற பிரபு, தோல்விக்கான காரணத்தை விளக்குகிறார்.

முன்பு கதையைச் சரிவரக் கேட்காமல் அவசர கோலத்தில் 'கால்ஷீட்' டைக் கொடுத்துவிட்டு, 'ஸ்டீரியோ டைப்' கேரக்டர்களை ஏற்று நடித்ததைப் பற்றி ரசிகர்கள் என்னிடமே கேட்டனர்

சில சூழ்நிலைகளால் அப்படிச் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. அப்படிப்பட்ட படங்கள் நீண்ட நாள் ஓடாமல் இருந்திருக்கலாம்.

ஆனால், வசூல் ரீதியாக வாங்கியவர்களைத் திருப்திப்படுத்தி உள்ளதை யாரும் மறுக்க முடியாது,

தற்போது கதைக்கும், எனது கேரக்டருக்கும் முக்கியத்துவம் கொடுத்துத்தான் படங்களை ஒப்புக் கொள்கிறேன்.

'கால்ஷீட்' விஷயத்திலும் முன்பு சில தவறுகள் நடந்திருக்கலாம். அதை எல்லாம் கவனத்தில் கொண்டு, இனியும் அப்படி நடக்காத வகையில் சில நடவடிக்கைகளை எடுத்துள்ளேன்.

சில படங்களின் தோல்விகள் என்னைச் சிந்திக்க வைத்தது உண்டு. எல்லாவற்றுக்கும் நேரம் வரவேண்டும் போலிருக்கிறது என்று நினைத்துக் கொள்வேன்.

'Bad Time' என்று எதையும் சொல்ல மாட்டேன். ஆனால் 'டைம்' என்று நம்மால் அழைக்கப்படும் அதன் பிடியில் சிக்காதவர்கள் யாருமே இருக்கமுடியாது.

'சிவாஜி மகன்' என்பதால் எனக்கு மட்டும் அதிலிருந்து விதிவிலக்கா என்ன?

ஆனால் கெட்ட நேரத்தையும் மாற்றக்கூடிய சக்தி கடுமையான உழைப்புக்கு உண்டு. இந்த 'ஃபீல்டில்' கடுமையான உழைப்பும், பொறுமையும் அதிகம் தேவை — என்கிறார் பிரபு.

## ★ திரை உலகில் ★

அமெரிக்காவில் இருந்து தமிழகம் வந்திருக்கிறார் நடிகை மஞ்சுளா. அவரை விரைவில் திரையிலும் காணலாம்.

*

ராஜசேகர் டைரக்ஷனில் ரஜனிகாந்த் தயாரிக்கும் படத்திற்கு "மாவீரன்" என்று பெயரிடப்பட்டுள்ளது.

*

விஜயகாந்த் மதுரையில் பட விநியோகக் கம்பெனி ஒன்றை ஆரம்பித்திருக்கிறார்.

*

கோவை செழியன் நீண்ட நாட்களுக்குப் பிறகு தயாரிக்கும் படத்தை எஸ். ஏ. சந்திரசேகர் இயக்குகிறார்.

*

டைரக்டர் கே. விஜயனின் ஐம்பதாவது படம் "பிரேம பாசம்" இதில் சிவகுமார் ஹீரோவாக நடிக்கிறார். முதல் படமான 'காவல் தெய்வம்' படத்திலும் சிவகுமார் நடித்திருந்தார்.

★

பத்திரிகைகளின் அட்டைப் படங்களிலும் கலண்டர்களிலும் வாழ்த்துக் கார்ட்டுகளிலும் அதிக இடம் பெற்றுவரும் நடிகை யார் என்று நினைக்கிறீர்கள்? ஸ்ரீதேவியேதான்!



## அன்பான கணவரை தேடுகிறார் சுஹாசினி

ஒரு பெண்ணுக்கு பணம், புகழ், அந்தஸ்து வந்து விட்டால் ஆசை துளிர்விடத் தொடங்கி விடும். அதுவும் இளம் பெண் என்றால் சொல்லவும் வேண்டுமா?

இளம் பெண்களுக்கு அப்படி என்ன ஆசை?

பலருக்கு கல்யாண ஆசைதான், அந்த ஆசை சுஹாசினிக்கும் வந்து விட்டது போலும்.

உயர்ந்த கலாரசனையும், நிறைய அன்பையும் கொண்ட ஒரு கணவரைத்தான் அவர் தேடுகிறார்.

துடிக்காதீர்கள்.

அதற்கு அவர் அப்பா சாருஹாசனிடமும் தாயாரிடமும் "பெர்மிஷன்" எடுக்க வேண்டாமா?.

அவர் எதிர்பார்க்கும் கணவரைப் பற்றி அவரே சொல்கிறார்:

நான் பெரிய குடும்பத்தில் பல பெண்களோடு கலந்து வாழ்பவள் என்பதால் நிறைய அன்பை என் கணவரிடம் எதிர் பார்க்கிறேன்.

சிறிய விஷயம் என்றாலும் உடனே அழுது விடும் சுபாவம் எனக்கு; என் கணவர் கவிதை, இசை ஆகியவற்றில் ஈடுபாடு உடையவராக இருக்க வேண்டும்.

மொத்தத்தில் அவர் உயர்ந்த கலாரசனை கொண்டவராக அமைய வேண்டும்.

— இப்படிப்பட்ட ஒருவரைத் தான் அவர் தேடுகிறார்.

தயாரிப்பு : பேரின்பம்

## தத்துவ...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளது. எண்ணமானது 'நான்' என்ற அகப்பற்றையும் 'எனது' என்ற புறப்பற்றையும் தோற்றுவித்ததோடு அதனையே மையமாகக் கொண்டு எம்மைச் செயற்படவும் செய்துள்ளது. எண்ணமானது என்றும் முழுமையாய் இராது. கூறு போடப்பட்ட எண்ணமானது 'என்னை'யும் கூறு போடுகிறது. 'நான்', என்னை', 'எனக்கு', 'நான் இன்னார்', 'நான் 'இன்னாரல்லன்' என்று கூறுவதெல்லாம் எண்ணத்தின் விளைவே 'எனது உலகம்', 'எனது சமயம்', 'எனது கடவுள்', இவையெல்லாம் எண்ணத்தின் கூறுகளின் வெளிப்பாடுகளே. எண்ணமானது காலத்தை — அளவை உள்ளுறுப்பாய்க் கொண்டுள்ளபடியாற்றான் அது கூறப்படுகின்றது. இதனை யாம் சரிவரப் புரிந்து கொண்டால் மட்டுமே எம்மால் கற்பனையில்லா, போலித்தனமில்லா சரியான நுட்பமான செயற்பாட்டைச் செய்யமுடியும்.

## சொற்சிலம்பம்

### போட்டி இல. 5

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | | X | 4 |
| | X | | X | | X | 5 | X |
| 6 | | | 7 | X | 8 | | 9 |
| | X | 10 | | 11 | | X | |
| 12 | 13 | | X | 14 | | | |
| 15 | | X | 16 | | | X | |
| | X | 17 | | | X | 18 | |
| X | 19 | | | X | 20 | | |

அனுப்புபவர் பெயர்:- ..............................

விலாசம்:- ..............................

..............................

கையெழுத்து:- ..............................

**இடமிருந்து வலம்:**

1. ஒரு மதத்தின் குரலாய்ஒலிக்கும் நாடு
4. பசு.
6. உடலுக்கும் உள்ளத்திற்கும் தெம்பூட்டும் ஒரு உடற் செயற்பாடு.
8. ஏற்றுமதி செய்ய அரசு துடிக்கிறது ஆனல் இறக்குமதி செய்யாமல் இருக்க முடியவில்லை.
10. இனத்திற்கு இனம், நாட்டிற்கு நாடு வேறுபடும்.
12. நீண்டகால அளவீடு.
14. ஒரு கை மிளகாயின் பெயர்
15. இந்த மார்க்கமாக முன்னேற முடியாமல் திணறும் அரச படைகள்.
16. பெண்களுக்கு அழகு தரும் ஆபரணம்.
17. காலம் காலமாகப் பேணப்படுவது
18. கற்றபின் நிற்க அதற்கு ......
19. மட்டக்களப்பில் இந்த மீன் இனம் உண்டு என்று சொல்வர்.
20. அவயவம்.

**மேலிருந்துகீழ்:**

1. இந்திரனுக்குரியது.
2. வளைவு.
3. ஒட்டுக் கேட்பவருக்குக் கூர்மையானது.
5. குதிரை
7. காயம்
8. இப்போதெல்லாம் மின்சாரத்திலும் இதை இயக்கலாம்.
9. சிவனின் உருவாக இந்துக்கள் கொள்வர்.
11. தமிழ் மக்களுக்கு அடிக்கடி ஏற்படுவது.
13. கங்கைக்கு இரண்டு பக்கத்திலும் இருக்கும்.
16. கலைகளில் ஒன்று.
17. கிறிஸ்தவர்களின் திருப்பதி.
18. பெருக்கல்

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் 'சொற்சிலம்பம்' குறுக்கெழுத்துப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.

2. ஒருவர் எத்தனை கூப்பன்களும் நிரப்பி அனுப்பலாம்.

3. 'சஞ்சீவி'யில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.

4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.

5. வெற்றி பெறும் முதல் மூன்று பேருக்கு முறையே 50, 25, 15 ரூபா பரிசில்கள் வழங்கப்படும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் 'சொற்சிலம்பம்' போட்டி இல. 5, சஞ்சீவி, தபால் பெட்டி இல. 23, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அடுத்துவரும் புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

7. தஷப்ரு-உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், ஷப்ரு யுனிக்கோ பிஹன்ஸ் லிமிட்டெட் ஆகியவற்றில் பணிபுரியும் ஊழியர்களும் அவர்களது உறவினர்களும் இந்தப் போட்டியில் பங்குபற்ற முடியாது.

* சொற்சிலம்பம் போட்டிகளில் பங்குபற்றும் வாசகர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. சில சமயங்களில் மூன்றுக்கு அதிகமான வாசகர்களும் சரியான விடையை அனுப்புகிறார்கள். அப்படியான சந்தர்ப்பங்களில் சரியான விடை எழுதியோரிலிருந்து அதிர்ஷ்ட சீட்டு மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்பதை வாசகர்களின் கவனத்துக்கு அறியத்தருகிறோம்.

### சொற்சிலம்பம் இல.3 இன் விடைகள்

**மேலிருந்து கீழ்:-** 1. அசுவமேதயாகம் 2. கடுகு 3. பாகை 4. வலையம் 5. ரவி 8. துன்பம் 10. திராவகம் 13. கல்வி 15. கைமாற்று 19. தையல் 21. ஏரி.

**இடமிருந்து வலம்:-** 1. அகம்பாவம் 6 சுடு 7. கைலை 8. துவி 9 வகுதி 11. யமன் 12. ராகம் 14 பகை 16. தகவல் 17. அம்மா 18 கவிதை 20 கலம் 21 ஏறு 22. கல்லூரி.

### சொற்சிலம்பம் போட்டி இல. 3

வெற்றி பெற்றவர்கள் விபரம்:-

முதலாம் இடம்:- அ. ஜெபநேசன், சென். மேரீஸ் லேன், ஊர்காவற்றுறை.

இரண்டாம் இடம்:- செல்வி. எஸ். மாணிக்கசபாபதி, 18, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

மூன்றாமிடம்:- வ. கயிலாயபிள்ளை, 71/6, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.

(பெப். 14 - 20)

வெள்ளி: ● அடுத்த மாதத்தில் கிழக்கு மாகாணத்தில் பெரும் தாக்குதல் நடத்த அரசு திட்டம்: இப்படி போராளிகள் அறிவிப்பு.

● படையினர் தாக்குதல்: அப்பாவிகள் பாதிப்பு என்று அமெரிக்கா கண்டனம்.

● மட்டக்களப்பில் 3 தமிழர் சடலமாக மீட்பு.

சனி: ● ராணுவம் சுட்டு 3 பென்சன்காரர் பலி; பலாலியிலும் ஹெலிக்கொப்டர் சூடு.

ஞாயிறு: ● குறிஞ்சாதீவில் படைகள் போராளிகள் உக்கிரப் போர்.

● தொண்டமான் மீது நம்பிக்கை இல்லாப் பிரேரணை — சுதந்திரக்கட்சி முன்னறிவித்தல்.

திங்கள்: ● குச்சவெளியில் இரு நாட்களாக இடைவிடாச் சமர்.

● வடக்கு - கிழக்கு இணைப்பு: கிழக்கிலங்கை முஸ்லிம்கள் ஆதரவு.

● சமஷ்டியோ, ஈழமோ கொடுக்க முடியாது: ஜே. ஆர். அறிவிப்பு.

செவ்வாய்: ● வடக்கில் செஞ்சிலுவைச் சங்கக்கிளை நிறுவக் கோரிக்கை.

● பிரிட்டிஷ் பெண் திருமதி வில்லிஸ் விடுதலை

● கொழும்பிலும் முகமூடி தலை ஆட்டுதல்; தமிழ் இளைஞர் கைது.

புதன்: ● இலங்கை நிலையை எழுத்தில் பெற இந்தியா அக்கறை.

● தாவடியில் யுத்த விமானங்கள் குவிந்து, குறிபார்த்து, குண்டு வீச்சு. 2 சிறுவர் 1 வயோதிபர் பலி.

● தெஹிவத்தைக் கண்ணிவெடி 35 பேர் பலி:

● யாழ்நகரில் ஷெல் விழுந்து ஒருவர் பலி.

வியாழன்: ● திம்புத் திட்ட அடிப்படையில் தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு — ஜே. ஆர். அறிவிப்பு.

● ஆவரங்காலில் [illegible] ஹெலிகொப்டர் சூடு.

● [illegible] தும்பிடி யாழ். [illegible] தரணிகள் கோரிக்கை.

## வெறுமை...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

'ஐயோ! என் முடிவு வந்து விட்டது!'

'ஏனைய காகிதங்களுக்கும் தானே? அவை அழவில்லையே?'

'அவை எழுதியோ கிறுக்கியோ வாழ்ந்து விட்டன.'

'நீ?'

'நான் வெறும் வெள்ளைக் காகிதமாக இருந்து விட்டேன். வாழ்வில் எதுவும் செய்யாது இருந்து விட்டேன். [illegible] ஷயாக இருக்க முடி [illegible]

என் நெஞ்சம் துணுக்குற்றது.

## வெள்ளித் திரை

# பெனிலோப்பின் விடுதலை: விழுந்தும் மீசையில் மண் ஒட்டாத கதை சொல்லப் பார்த்த அரசு

## தந்திரமாக நடந்த ராஜதந்திரி மக்டொமெட்

வீரம் செழித்த பூமி - தமிழ் உணர்வு உயர்ந்து சிறந்த தாயகம் - சைவம் தழைத்த ஸ்தலம் - நலலூர் பதி.

வீரவேங்கையாய் கர்ஜித்து நின்ற யாழ்ப்பாணத்தின் கடைசி மன்னன் சங்கிலியன் தன்னுடைய இராச்சியத்தின் தலைநகராகக் கொண்டதும் இந்த நல்லூரைத் தான்.

சங்கிலியனின் வீரம் வெளியிடப்பட்ட அதே இடத்தில் — எங்கு தன்னுடைய அரண்மனையை வைத்து சங்கிலியன் வேங்கையாய் ஆட்சி புரிந்தானோ அதே இடத்தில் — தமிழர்களின் மனதை உருக்கும் ஒரு அவலமான காட்சி.

தன்னுடைய தாயக மண்ணிலே தமிழ் மக்கள் வீடிழந்து, உடைமைகளை இழந்து, உறவினர்களை இழந்து அகதிகளாக முகாம்களிலே தங்கியிருக்கும் காட்சி தான் அது.

வீரத்துடன் போராடிய சங்கிலியனின் அரண்மனை வாயில் முகப்புக்கு அருகில் சோகத்துடன் பொலிவிழந்து இருக்கும் தமிழர்களைக் கண்டேன். என்னே பரிதாபம்!

அங்கு சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சி கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்றது.

பிரிட்டிஷ் பெண் திருமதி பெனிலோப் வில்லிஸ் அகதி முகாமில் வைத்துத்தான் விடுவிக்கப்பட்டார்.

திருமதி வில்லிஸ் கடத்தல் விடயத்தில் இலங்கை அரசு படுதோல்வியடைந்திருக்கிறது. வெற்றி நமதே என்று அறிவித்திருக்கிறார்கள் 'ஈரோஸ்' போராளிகள்.

வெற்றி அவர்களுக்கு மட்டுமல்ல. மற்றொருவருக்கும் கிடைத்திருக்கிறது. பிரிட்டிஷ் தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் ஏ. மக்டோமெட்தான் அவர்.

வில்லிஸ் விடயத்தில் தங்கள் குட்டு அகப்பட்டுக் கொண்டுவிட்டதை கொழும்பு வட்டாரங்கள் ஆரப்பத்தில் உணரவில்லை.

ஆனால் போராளிகள் அடுத்தடுத்து விட்ட அறிக்கைகளும் வில்லிஸை விசாரணை செய்தது தொடர்பாக அவர்கள் விளம்பரப்படுத்திய தகவல்களும் கொழும்பை நிலைகுலையச் செய்தன.





ஆரம்பத்தில் முரண்டு பிடித்த அரச பகுதி பின்னர் தன்னுடைய தொனியை மாற்றிக் கொண்டது. 'விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்பது போல தப்பிக் கொள்ளத் தான் முதலில் அவர்கள் விரும்பினார்கள்.

அதனால் தான் முதலில் அடம்பிடித்தவர்கள் பின்னர் வாயை மூடி மௌனி போல நடித்தார்கள்.

பயங்கரவாதத்திற்கு அடிபணிய மாட்டோம் என்றவர்கள் அடிபணிந்தார்கள்; சர்வதேச செஞ்சிலுவைப் பிரதிநிதி இலங்கை வர அனுமதித்தார்கள்.

செஞ்சிலுவைப் பிரதிநிதியுடன் பிரிட்டிஷ் தூதரக இரண்டாவது செயலாளர் திரு மக்டோமெட்டும் வந்தார்.

அவர் மூலம் சிலவற்றைச் சாதிக்க கொழும்பு வட்டாரங்கள் திட்டமிட்டிருந்தன.

செஞ்சிலுவைப் பிரதிநிதி செல்வி. சன்ட்ரா சிங்கர், திரு. மக்டோமெட், திருமதி. வில்லிஸ் ஆகியோரை யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர்கள் எவரையும் சந்திக்க விடாமல் கொழும்புக்குக் கொண்டு வந்தால், அங்கு வைத்து தமக்குச் சாதகமான முறையில் அவர்களைக் கொண்டு அறிக்கை விட்டு லாபம் சம்பாதிக்க கொழும்பு வட்டாரம் எண்ணியது.

திரு. மக்டோமெட்டையும் செல்வி. சிங்கரையும் யாழ். அசோக் ஹோட்டலில் சந்தித்த போது இது ஊர்ஜிதப் படுத்தப்பட்டது.

செய்தியாளர்களுடன் பேச அவர்கள் பயந்தனர். படம் எடுக்க அனுமதிக்க மாட்டோம் என்றார்கள்.

'நாம் மிகவும் பயப்படுகிறோம், பத்திரிகையாளர்களுடன் பேச வேண்டாம் என்று கொழும்பு உத்தரவு. கொழும்புக்கு நாம் அஞ்சுகிறோம்' — இப்படி திரு. மக்டோமெட் சொன்னார்.

'We are afraid of Colombo' என்று அவர் திருப்பித் திருப்பிக் கூறினார்.

திரு. மக்டோமெட் வெற்றிகண்டு விட்டார். தான் உண்மையில் ஒரு இராஜதந்திரிதான் என்பதை அவர் நிரூபித்து விட்டார்.

திருமதி. வில்லிஸிடம் செய்தியாளர்கள் கேள்விகள் பலவற்றைக் கேட்டார்கள்.

உடனே திரு. மக்டோமெட் குறுக்கிட்டார்.

வில்லிஸுடன் நீங்கள் கதைப்பது அவரை விடுவிப்பது தொடர்பான செஞ்சிலுவைச் சங்க உடன்படிக்கைக்கு முரணானது ஆகவே அதற்கு அனுமதிக்க முடியாது' என்றார்.

செய்தியாளர் விடவில்லை. 'அது என்ன ஒப்பந்தம்? எப்போது, யார் யாருக்கிடையில் செய்யப்பட்டது?' என்று அடுத்தடுத்து வினவினார்கள்.

### திசை மாற்றினார்

திரு. மக்டோமெட் சமாளிக்க முயன்றார்.

**ந. வித்தியாதரன்**

ஆனால் நல்லூர் முகாமில் வைத்து திடகாத்திரமாக இருந்த திருமதி. வில்லிஸையும் செல்வி. சிங்கரையும் தன்னையும் பத்திரிகையாளர்கள் சுயாதீனமாகப் படம் எடுப்பதை அவரால் தடுக்க முடியவில்லை.

போராளிகளிடம் திரு. மக்டோமெட் ஆட்சேபம் தெரிவித்த போதும் நிலைமையை புரிந்து கொண்ட போராளிகள் அதனைத் தடுக்கவில்லை.

ஆனால் திருமதி. வில்லிஸ் தமக்கு ஏற்பட்ட உண்மையான அனுபவத்தை யாழ்ப்பாணத்தில் வைத்துப் பத்திரிகையாளர்களிடம் தெரிவிக்காமல் தடுப்பதில்

ஆனால் பத்திரிகையாளர்கள் விடவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் ஈரோஸ் இயக்கப் பிரதிநிதி ஒருவர் குறுக்கிட்டார்.

பத்திரிகையாளருடன் திருமதி. வில்லிஸ் பேசுவதே சரியானது என அவர் வலியுறுத்தினார்.

உடனே திரு மக்டோமெட் தம்முடைய வாதத்தின் போக்கைத் திசை மாற்றினார்.

'திருமதி வில்லிஸ் இப்போது களைத்துக் காணப்படுகிறார். அவர் பத்திரிகையாளருடன் பேச இப்போது விரும்பவில்லை. அப்படியல்லவா?' என்று திருமதி வில்லிஸைப் பார்த்து திரு மக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**NIRU**
Kondavil - Branch Kokuvil.
**A\L 86**
கலை வர்த்தக பிரிவு
ஆரம்பம் (23. 02. 86)
கணக்கியல் (கம்பனி)
மரியதாஸ் - Sat, Sun 3 – 4
88 பொருளியல் - சின்னத்தம்பி Sat 3-4
கணக்கியல்- மரியதாஸ் Sat, Sun 4-5



# சஞ்சீவி

22.02.1986



A/L 86 விஞ்ஞான பிரிவு
ஆரம்பம் — 23-02-86
பௌதீகவியல்
86 ஒட்டமின்னியல் Sat, Sun 9.30
87—வெப்பவியல் Sat, Sun 10.30
திரு சௌந்தி B Sc (Hons)
இரசாயனவியல்
86—வினு விடை Sat, Sun 8 -9
87—வெப்ப இரசாயனம் Sat, Sun 9 10
திரு.செல்வா B Sc (Hons)
NIRU TUITION CENTRE,
STATION ROAD, KONDAVIL.


# பண்டாரிக்கு சாதனை ஆர்வம்; தமிழருக்கோ சோதனையும் உயிர் வேதனையும்

பார்த்தசாரதி ராஜதந்திரம் வென்றதா?

பண்டாரி ராஜதந்திரம் வென்றதா?

இந்தப் பலப்பரீட்சைக்கு இலங்கை இனப் பிரச்சினைதான் கிடைத்தது.

1983 ஜூலை கலவரத்தில் 400 தமிழர் வரை தான் இறந்தனர். இப்படி இலங்கை அரசு கூறிற்று.

இல்லை, சுமார் 2,000 பேர் வரையில் இறந்து இருப்பர். இப்படி மற்ற வட்டாரங்கள் கூறின.

இதைப் பொறுக்க முடியாமல் அன்னை இந்திரா இலங்கைத் தமிழனுக்கு உதவி செய்ய முன்வந்தார்.

1983 ஜூலை கலவரத்துக்கு முன்னரே அன்னை இந்திரா தமிழர் பிரச்சினையில் தலையிட்டு விட்டார்.

எப்படி? மரண விசாரணை இல்லாமல் பிரேதங்களை அடக்கம் செய்யும் அவசரகாலச் சட்ட விதிகளை இலங்கை அரசு அமுலுக்குக்கொண்டு வந்தது.

அது குறித்து புதுடில்லியில் இருந்த இலங்கைத் தூதரை அழைத்து இந்திரா கவலை தெரிவித்தது.

அன்றைக்கே அன்னை, இனப்பிரச்சினையில் தலையிட்டு விட்டார்.

அதன் பின்னர் இடம் பெற்றது தான் 1983 ஜூலை கலவரம்.

ஜூலை கலவரத்தைத் தொடர்ந்து தான் பார்த்தசாரதியின் ராஜதந்திரம் ஆரம்பமானது.

பார்த்தசாரதி பல முறை சிறப்புத் தூதராக இலங்கை வந்து சென்றார். திரு ஜெயவர்த்தனவும் புதுடில்லி சென்று அன்னை இந்திராவைச் சந்தித்தார். 'இணைப்பு-சி' உருவானது.

'இணைப்பு-சி'யைஅடிப்படையாக வைத்து சர்வகட்சி மாநாடு ஆரம்பமானது.

மாநாடு முடியும் கருணம், அன்னை இந்திராவின் வாழ்வு முடிந்தது. டிசம்பரில் சர்வகட்சி மாநாடும் முறிந்தது

பார்த்தசாரதி ராஜதந்திரமும் ஸ்தம்பித்தது.

அன்னையின் பின்னுல் மைந்தன் பதவிக்கு வந்ததைத் தொடர்ந்து, பண்டாரியின் ராஜதந்திரம் ஆரம்பமானது.

### பண்டாரி வரவு

இனப்பிரச்சினைத் தீர்வில் ஒரு சாதனையை நிலை நாட்ட பண்டாரி முனைந்தார்.

### உள்ளும் புறமும்

பார்த்தசாரதி போய் பண்டாரி வந்தது இலங்கைக்கு பெரும் மகிழ்ச்சியை அளித்தது.

இனி நம்பாடு கொண்டாட்டம் தான்-இப்படி இலங்கை அரசு வட்டாரங்கள் குதூகலித்தன.

பண்டாரியும் இலங்கை வரத் தொடங்கினுர். பார்த்தசாரதியைப் போல ஜனதிபதி முதல் சகலரையும் சந்தித்தார் திரு. பண்டாரி.

பண்டாரியின் அணுகுமுறையில் தமிழர் வாழ்வில் தினமும் '1983 ஜூலை' நடக்கத் தொடங்கியது.

'1983 ஜூலை' என்ன அது ஒரு மூலைக்கு என்று கூறும் அளவுக்கு அட்டூழியம் அதிகரிக்கத் தொடங்கியது.

கொழும்பில் இருந்த தமிழர் தாக்கப்பட்டது குறித்து கலக்கமடைந்தவர் அன்னை இந்திரா.

ஆனுல் பண்டாரி ராஜதந்திரம், தமிழனை சொந்தப் பூமியில் இருந்தே அகதிகளாக்கியது. பாலகர்கள், வயோதிபர்களையும் பயங்கரவாதிகளாக்கின.

நாடோடிக் கூட்டத்துக்கும் பாதுகாப்பு உண்டு. அது உயிருக்கான பாதுகாப்பு.

அந்த பாதுகாப்புக் கூட இல்லாத நிலை தமிழனுக்கு சொந்தப் பூமியிலே ஏற்பட்டது.

உரிமைகோரி 1957 இல் 'திருமலை யாத்திரை' நடத்திய இனம், இன்று அந்தத் திருமலையில் இருந்து வெளியேறி உயிரை மட்டும் கைகளில் பிடித்துக் கொண்டு அலைகின்றது.

வடக்கு-கிழக்கு இணைப்புக்கு வழிவகுத்தது, அந்தத் திருமலை யாத்திரை.

இன்று உயிர் உடலுடன் இணைந்து இருக்க வேண்டும் என்பதற்காக தமிழினம் போராட வேண்டிய கட்டம்.

### இலங்கையை பலப்படுத்திய ராஜதந்திரம்

யுத்த நிறுத்தம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

அதற்கு முன்னரே பல தமிழ்க் கிராமங்கள் கிழக்கு மாகாணத்திலே தரை மட்டமாக்கப்பட்டன.

யுத்த நிறுத்தம் வந்த பின்னர் நடந்த அட்டூழியங்கள் பல

ஆயிரக்கணக்கான அப்பாவிகள், பெண்கள், குழந்தைகள் மாண்டு விட்டனர்.

புதிய அணுகுமுறை, பல 'கோரச்' சாதனைகளை நிலை நாட்டிவிட்டன.

தேடுதல், தரைத் தாக்குதல், கடல் தாக்குதல், ஹெலிக்கொப்டர் தாக்குதல் எல்லாம் போய் யுத்த விமானத் தாக்குதல் வரை செய்யுமளவுக்கு பண்டாரியின் ராஜதந்திரம், இலங்கை அரசை வளர்த்து விட்டது

### () குறுமுனி ()

### டில்லி உணர்கிறது

இப்பொழுது தான் டில்லியில் இருந்து செய்தி வந்துள்ளது.

தீர்வு ஒன்றைக் காண வேண்டும் என்ற உந்துதலில், அவசரத்தில் இராஜதந்திர ரீதியில் பண்டாரி விட்ட பெரும் பிழையினுல் ஏற்பட்டது தான் இன்றைய நிலை—

இப்படி இந்திய வெளியுறவு அமைச்சுடன் நெருங்கிய தொடர்புள்ள பத்திரிகையாளர் திரு. ஜி கே. ரெட்டி எழுதியுள்ளார்.

திரு. பண்டாரி விட்ட பெருந் தவறை டில்லி உணர்ந்து விட்டதாகவும் திரு. ரெட்டி குறிப்பறிந்து எழுதியிருக்கின்றுர்.

கண்கெட்ட பின்னர் சூரிய நமஸ்காரம்? அதனுல் என்ன பலன்?

### பண்டாரியும் உணர்ந்தார்

இலங்கை அரசின் 57 பக்க பதிலைப் பார்த்ததும் தான் தெரிந்தது. தான் தோற்றுவிட்டேன் என்பதை அப்போது தான் உணர்ந்தார் பண்டாரி.

இலங்கை விஜயத்தை ரத்துச் செய்த போதிலும் அதன் பின்னர் கூட நிச்சயிக்கப்பட்டபடி சென்னை வந்தார், கூட்டணித் தலைவர்களோடு போராளிகளைச் சென்னையில் சந்தித்தார்.

இலங்கைத் தமிழர் வகைதொகையின்றி கொல்லப்படுவது அவருக்குக் கூறப்பட்டது. அது பற்றி போராளிகள் எடுத்துச் சொன்ன போது திரு. பண்டாரி (Visibly disturbed) கண் கலங்கினுர்.

இப்படிப் போராளிகள் சொன்னதாக 'இந்து' செய்தி வெளியிட்டது.

இராஜதந்திரத் துறையில் சாதனை ஒன்றை நிகழ்த்த தமிழர் பிரச்சினையைப் பயன்படுத்தத் தீர்மானித்து செயல்பட்டார், பண்டாரி

இறுதியில் அவருக்கு ஏற்பட்டது வேதனை!

அதனுல் தமிழனுக்கோ சொல்லமுடியாத சோதனை!!

சோதனைமேல் சோதனை போதுமடா சாமி என்று சொல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளான் தமிழன்.

வேதனையின் மத்தியில் வெளியேறுகின்றுர் திரு. பண்டாரி.

சோதனையின் மத்தியில் புதிய வெளியுறவுச் செயலாளராகத் திரு ஏ பி. வெங்கடேஷ்வரன் பதவி ஏற்கப் போகிறுர்

பார்த்தசாரதியை விரும்பாதவர்கள் வெங்கடேஷ்வரனை விரும்புவார்களா? பார்த்தசாரதியும் மாயக் கிருஷ்ணன் தான் வெங்கடேஷ்வரனும் அந்தப் பெருமாள்தான்.

கிருஷ்ணரின் அவதாரம் தான் புத்தர் என்கிறுர்கள் அவ்வாருயின் புத்த பக்தர்கள் பெருமாளை வெறுக்கலாமோ?

## பஸ் விபத்து: 9 பேர் பலி!

கொழும்பு, பெப் 22

பதுளை — மகியங்கனை வீதியில் துங்சிந்தை நீர் வீழ்ச்சிக்கு அருகில் இ. போ. ச. பஸ் ஒன்று நேற்றுக் காலை 150 அடி பள்ளத்தில் விழுந்து நொருங்கியதால் 9 பேர் உயிரிழந்தனர்.

27 பேர் படுகாயம் அடைந்தனர் 16 பேர் ஆபத்தான நிலையில் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## சிற்றூரில்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

றவர்கள் இவர்கள். சிற்றுறை அண்டியுள்ள பகுதியில் குடியமர்த்தக் கொண்டுவரப்பட்டவர்கள். பெரும்பாலானவர்கள் 20-30 வயதுடையவர்கள்

இவர்களை குடியமர்த்த முனைந்த பகுதிகளில் நீண்ட காலமாகவே தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து வந்தனர்.

கடந்த ஆண்டு 'போர் நிறுத்தம்' நிலவிய காலங்களில் இப்பகுதிக்குள் பல தடவைகள் இராணுவமும் ஆயுதப் பயிற்சி முடித்த சிங்கள நபர்களும் புகுந்து பொது மக்களை சுட்டுக் கொன்றும், கற்பழித்தும், தீ வைத்தும் அட்டூழியம் புரிந்திருந்தனர்.

இதனுல் தமிழ் மக்கள் அகதிகளாக அங்கிருந்து வெளியேற வேண்டியதாயிற்று

வெறிச்சோடிக் கிடந்த இந்த நிலங்களில் ஆயுத பாணிகளான சிங்களவரை குடியமர்த்த எடுத்த முயற்சியை முறியடிக்கவே இந்த அதிரடித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

## பெனிலோப் . . .

(7ம் பக்கத் தொடர்ச்சி)

டோமெட் கேட்டார்.

முதலில் தாம் பத்திரிகையாளருடன் பேசுவது தம்மை விடுவிப்பது தொடர்பான நிபந்தனைகளை மீறுவதாகும் என்று மக்டோமெட்டுடன் ஒத்துழைத்த திருமதி வில்லிஸ் திரு. மக்டோமெட்டின் பேச்சைக் கேட்டதும் தமது பதிலை மாற்றிக்கொண்டார்.

"நான் களைத்து இருக்கிறேன். உங்களுடன் பேசத் தயாராக இல்லை' என்று அவர் சொன்னுர்.

இதனையடுத்து ஈரோஸ் இயக்கப் பிரதிநிதி திரு. மக்டோமெட்டுடன் கதைத்தார்.

"திருமதி வில்லிஸ்" யாழ்ப்பாணத்தில் வைத்து பத்திரிகையாளரைச் சந்திக்க மறுக்கிறுர்' அதேபோல் கொழும்பில் வைத்து பத்திரிகையாளரைச் சந்திக்காமல் தவிர்ப்பாரா? அதற்கு நீங்கள் உறுதி கூறுவீர்களா? என்று அவர் கேட்டார்.

அதற்கு திரு. மக்டோமெட் நான்எப்படி உறுதி தரமுடியும்? அது திருமதி வில்லிஸைப் பொறுத்தது என்று கூறித் தப்பிக் கொண்டார்.

திருமதி வில்லிஸ் சுகதேகியாக விடுவிக்கப்பட்டதை நாம் கண்டோம். அவரைப் படம் எடுத்தோம். அவருக்கு நன்கு காது கேட்டது பார்வை நன்ருகத் தெரிவதையும் நாம் அவதானித்தோம்.

ஆனுல் கொழும்பில் வில்லிஸ் சொன்னது என்ன?

"எனக்குக் கண் நன்கு தெரியாது காது கேளாது நான் ஏன் உளவு வேலை பார்க்கப் போகிறேன்? இப்படிக்கேட்டார் அவர்.

அவர் கண்ணிருந்தும் குருடரோ? காதிருந்தும் செவிடரோ?

பொது இடத்தில் செய்தியாளர்கள் முன்னிலையில் வைத்து விடுவிக்கப்பட்டதால் இத்துடன் போயிற்று

சாதாரணமாக வைத்தது போல் விடுவிக்கப்பட்டிருந்தால், விடுவிப்பின் பின்னர் திருமதி வில்லிஸைக்கொண்டு போரா

# உலக உலா

என்.பி.சீலன்

# இரும்புச் சீமாட்டி துரும்பாவாரா?

பிரிட்டிஷ் பிரதமர் மார்க்கிரட் தட்சரின் தலைமைக்கு முன் எப்போதுமில்லாதவாறு பெரும் சோதனை ஏற்பட்டிருக்கிறது

ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கடி, ஜனநாயக மரபுகளின் ஆணிவேராகக் கருதப்பட்டு வரும் பிரிட்டனுக்கு சர்வதேச அரங்கில் இருந்து வரும் மதிப்புக்கு ஒரு சவால் ஆகும்.

வெஸ்ட்லாண்ட் ஹெலிக்கொப்டர் கம்பெனி விவகாரமே தற்போதைய நெருக்கடிக்குக் காரணமாகும்.

பிரதமர் தட்சர் தமது ஆட்சிக் காலத்தில் ஏற்கனவே இரு பெரும் நெருக்கடிகளைச் சமாளித்திருந்தார்.

ஒன்று 1982 போக்லாண்ட் யுத்தம். மற்றது ஒரு வருட காலம் நீடித்த நிலக்கரி சுரங்கத் தொழிலாளர் வேலை நிறுத்தம்.

தற்போது ஏற்பட்டிருப்பது மூன்ருவது சோதனை.

வெஸ்ட்லாண்ட் ஹெலிக்கொப்டர் கம்பெனி விவகாரம் ஏற்கனவே இரண்டு பிரிட்டிஷ் அமைச்சர்களின் பதவியைப் பறித்து விட்டது.

இந்த இரு அமைச்சர்களில் பாதுகாப்பு அமைச்சர் மைக்கல் ஹெசெல்ரைனும் ஒருவர்.

கன்சர்வேட்டிவ் கட்சிக்குள் இயங்கி வரும் முன்னுள் பிரதமர் எட்வர்ட் ஹித் தலைமையிலான அதிருப்தியாளர் கோஷ்டியுடன் பதவி இழந்த அமைச்சர்களும் சேர்ந்து கொண்டனர். இதுவே இரும்புச் சீமாட்டி தட்சரின் தலைமைக்கு நெருக்கடி அதிகரித்ததன் காரணம் ஆகும்.

தற்போது பிரிட்டனில் இருந்து வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் இந்த அதிருப்தியாளர்கள் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

திருமதி தட்சர் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் கவிழ்ந்து விடுவார் என்று பிரபல அமெரிக்க சோதிடர் ஒருவர் அண்மையில் தெரிவித்திருந்தார்.

இவரின் கூற்று எவ்வளவு தூரம் உண்மை என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

## வீர அஞ்சலி

யாழ்ப்பாணம், பெப் 22

22-2-84 இல் பண்ணையில் ஸ்ரீ லங்கா அரசு கூலிப்படைகளுடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணம் அடைந்த தோழர் எஸ். கணேசலிங்கத்துக்கு தமிழ் ஈழ இராணுவம் இரண்டாவது புரட்சிகர வீர அஞ்சலியை செலுத்துகின்றது.

இப்படி தமிழ்ஈழ விடுதலை இராணுவத்தின் அரசியல் பிரிவு அறிக்கை வெளியிட்டுள்ளது.

## கருத்துக்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளும். மேலும் எத்தனையோ வருடங்கள் வாழ்ந்து ஆயிரக் கணக்கான ரூபா வருமானத்தைத் தரக் கூடிய இளம் பனைகளை தறிக்கிறும்.

அவ்வாருயின் பனைவளம் பேணுவது எப்படி? பனையை வடக்கின் பெருந்தோட்டப் பயிராகச் செய்வதில் யாராவது நாட்டம் காட்டுகிறுமா? இவற்றைச் செய்வது இனி எப்போது?

பனைகளைக் கண்டபடி தறிப்பதைத் தடுக்கப் பனம் பொருள் அபிவிருத்தி சபை நடவடிக்கை எடுத்திருப்பது வரவேற்கத்தக்கது.

அதற்குப் பொது மக்கள் ஒத்துழைப்பு மிக அவசியம். கைவசம் உள்ள வளத்தை நழுவ விட்டு, வளம் இலையே என்று வெறுவாய் மெல்லுவதால் ஏது பயன்?

## ருகிங்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

றத்தைச் சுமத்தாத படியாலும்—

மாணவன் தான் இனி மேல் துன்புறுத்தலில் ஈடுபடமாட்டேன் என்று வாக்குறுதி அளித்து மன்னிப்புக் கேட்டதாலும் அவரைக் கடுமையாக எச்சரித்ததை விட மேல் நடவடிக்கை ஏதும் எடுக்கப் படவில்லை.

இது தவிர, மாணவிகள் துன்புறுத்தப்படுவது பற்றி நிர்வாகத்திடம் வேறு முறையீடு ஏதும் செய்யப்படவில்லை.

இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

(அறிக்கையின் முழு விவரமும் நாளைய உதயனில் பிரசுரமாகும்.)

னிகள் மீது எத்துணை குற்றம் அபாண்டம் சுமத்தப் பட்டிருக்குமோ? யாருக்குத்தெரியும்?

## இரண்டாவது இலக்கில் சிக்கினுர்

கொழும்பு, பெப். 22

1984 இல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கண்ணி வெடித் தாக்குதல் சம்பவத்தில் காயங்களுடன் தப்பிய இராணுவ சார்ஜண்ட் எதிரிசிங்கா திருகோணமலை, தெஹிவத்தை கண்ணி வெடித் தாக்குதலில் மரணம் அடைந்தார்.

## நல்லூரில் கேட்ட சத்தம்

யாழ்ப்பாணம், பெப் 22

நல்லூர்ப் பகுதியில் நேற்று இரவு பெரும் குண்டு வெடிப்புச் சத்தங்களும், துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் கேட்டன.

நல்லூர் குறுக்குத் தெருவையும் அதனைச் சூழ்ந்த பகுதியிலும் கேட்ட இந்தக் குண்டு வெடிப்புச் சத்தங்களினுல் அந்தப்பகுதி அதிர்ந்தது. மக்கள் கலங்கினர்.

இரு கோஷ்டிகளுக்கு இடையில் ஏற்பட்ட மோதலே குண்டு வெடிப்புவரைச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அனேகமான சூடுகள் வானத்தை நோக்கித் தீர்க்கப்பட்டதாகவும்—

சூடு, குண்டுவெடிப்புகளினுல் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் தெரியவந்தது

சூட்டுச் சத்தங்கள் நேற்று இரவு சுமார் 8 மணியளவில் கேட்கத் தொடங்கின. இரவு 9.15 மணிவரை சூடு அவ்வப்போது கேட்டுக் கொண்டிருந்தது.

## அகதிகள் பற்றி ஆராய மாநாடு

கொழும்பு, பெப். 22

அகதிகள் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வது சம்பந்தமாக மாநாடு ஒன்று கொழும்பில் அடுத்த செவ்வாய்க்கிழமை (25-2-86) நடைபெற உள்ளது.

மலையக அரசாங்க அதிபர்கள், வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்க அதிபர்கள் இம் மாநாட்டில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளனர்.


### தேவை

வொக்ஸ் வெகன் கார்
12000, 13000 தேவை
தொடர்பு கொள்ளவும்
ராஜநாயகம்
C/o சுலைமான் கண்டு பிறதேர்ஸ்
5, 7 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

மினிசினிமா

நவா மினி
(உஷா மினி முன்பாக)
248/5 K. K. S. Rd,
யாழ்ப்பாணம்.




## அக்கரைப்பற்றில்....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது

இச் சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

அக்கரைப்பற்று— சாகாமம் வீதியில் 16 மைல் தொலைவில் தங்கவேலாயுதபுரம் என்ற இக்குடியேற்றத் திட்டம் அமைந்துள்ளது.

சம்பவதினம் இரவு 100 க்கு மேற்பட்ட விவசாயிகள், சூடுமிதிக்கும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டு இருந்தனர்.

பெட்ரோல்மக்ஸ் துணையுடன் சூடுமிதிக்கும் வேலைகள் நடந்தன. அப்போது வானில் ஹெலிக்கொப்டர் ஒன்று தாழப் பறந்து சென்றது. சில நிமிடங்கள் கழிந்தன.

திடீரென்று ஆயுதப் படை வீரர்கள் அந்த இடத்தைச் சூழ்ந்து கொண்டு சுடத் தொடங்கினுர்களாம்.

சூடு பட்டு மரணமானவர்கள் தொகை இன்னும் சரியாகக் கணக்கெடுக்கப்படவில்லை.

இறந்தவர்களின் சடலங்களும் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்படவில்லை.

வயலில் காணப்பட்ட வைக்கோல்களுக்குள் சடலங்கள் போடப்பட்டு எரிக்கப்பட்டன என்று அஞ்சப்படுகின்றது

ஆறுமுகம் நல்லதம்பி (65 வயது).

நல்லரசி விநாயகமூர்த்தி.

கோபாலகிருஷ்ணன்.

பாக்கியராசா. ஆகிய நால்வரும் இறந்தவர்களில் அடங்குவதாகக் கூறப்படுகின்றது


சமையல் செய்ய விளக்கெரிக்க
நீரிறைக்க ஜெனரேட்டர் இயக்க

## எரிவாயுச் சாதனம் அமைத்திடுவீர்!

அமைத்துத் தருபவர்கள்:-
டைனமிக் எஞ்ஜினியரிங் லிமிடெட்
476, பிரதான வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.
(சென்ற் ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)


## நாணய மாற்று விவரம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விவரம் வாராந்தம் சஞ்சீவியில் வெளியிடப்படும்.

(இது நேற்றைய மாற்று விகிதமாகும்)

| வெளிநாட்டு நாணயம் | இலங்கையில் (ரூபா சதத்தில்) |
|---|---|
| ஸ்ரேலிங் பவுண் | 39. 14 |
| அமெ. டாலர் | 27. 35 |
| இந்திய ரூபா | 02. 22 |
| மார்க் (ஜெர்மனி) | 11. 70 |
| அவுஸ். டாலர் | [illegible] |
| கனடா டாலர் | [illegible] |
| பிராங் (பிரெஞ்சு) | 03. 81 |


தகுதியிருந்தால்
## உடன் வேலை உண்டு

★ இயந்திர இயக்குனர்:
ஹைல்டிவேக் ஓட்டமற்றிக் சிலிண்டர் இயந்திரம் 5 வருட அனுபவம்

★ மேற்பார்வையாளர்:-
பாதுகாப்புச் சேவையிலிருந்து இளைப்பாறியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்,

உங்கள் நீங்கள் அனுபவங்களுடன் எதிர் பார்க்கும் வேதனத்தையும் குறிப்பிட்டு 27-02-86 க்கு முன் விண்ணப்பிக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

விளம்பர இலக்கம் 7,
மே/பா உதயன்
த. பெ. இல: 23,
யாழ்ப்பாணம்.



அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த ஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட். 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகர்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 22 - 2 -1986



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org